# சமூக அறிவியல்

## ஆறாம் வகுப்பு

### மூன்றாம் பருவம்


பாடநூல் குழு

**மேலாய்வுக் குழு**

திரு.வா.ஆ.சிவஞானம், மேனாள் இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை மாவட்டம்.

திரு.அ.எக்பர்ட் சச்சிதானந்தம், மேனாள் தலைமை ஆசிரியர், அந்திரசன் மேனிலைப்பள்ளி, காஞ்சிபுரம் மாவட்டம்.

**வல்லுநர் குழு**

பேராசிரியர்.மு. நாகநாதன், மேனாள் திட்டக்குழுத் துணைத்தலைவர்.

பேராசிரியர். அ.கருணானந்தன், மேனாள் வரலாற்றுத் துறைத்தலைவர், விவேகானந்தா கல்லூரி, சென்னை மாவட்டம்.

திரு. த.வி . வெங்கடேஸ்வரன், அறிவியலாளர், விஞ்ஞான் பிரசார் அறிவியல், தொழில்நுட்பத்துறை, புதுதில்லி.

**நூலாசிரியர் குழு**

திருமதி.மு.மணிமேகலை, முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், சென்னை மாவட்டம்.

திரு.கா.நடராஜன், முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், களியாம்பூண்டி.

திரு.க.இராமராஜ், விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்

திரு.ச.ரவிசங்கர், ஆசிரியப் பயிற்றுநர் , திருத்தணி வட்டார வளமையம், திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி.செ.சுகந்தி, ஆசிரியப் பயிற்றுநர் , வில்லிவாக்கம் வட்டார வளமையம், திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி.செ.ஜெயந்தி எஸ்தர், ஆசிரியப் பயிற்றுநர் , வாலாசாபாத் வட்டார வளமையம், காஞ்சிபுரம் மாவட்டம்.

திருமதி.ச.த.காளத்தி, இடைநிலைஆசிரியர், ஊ.ஒ.தொ. பள்ளி, கலியனூர் கண்டிகை, திருவள்ளூர் மாவட்டம்

திரு.து.சுதாகர், முதுகலைப்பட்டதாரி ஆசிரியர், ஒய்,ஆர்.டி.வி.பதின்ம மேனிலைப்பள்ளி, சிவகாசி.

திருமதி.டோரத்தி ராஜேந்திரன்,சென்சுரி பவுன்டேசன் பதின்ம மேனிலைப்பள்ளி,திருப்பூர்.

திரு.வே.ஆறுமுகம், பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, பவர்ஹவுஸ், பரளி, கோவை மாவட்டம்.

திரு.மு.சரவணன், பட்டதாரி ஆசிரியை, அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, முசிறி, திருச்சி மாவட்டம்.

திருமதி.அ.அமுதா, பட்டதாரி ஆசிரியை, பதின்ம மேனிலைப்பள்ளி, சாந்தோம்,சென்னை மாவட்டம்.

திரு.ந.மாதவன், பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வெங்கடேசபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு.ந.பெரியசாமி, பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ம.வி.வடக்கு, தலைவாசல்

திருமதி.ந.சாந்தி, இடைநிலை ஆசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, பாலவேடு, சென்னை மாவட்டம்

திருமதி.சி.ஆர்.சாந்தி, இடைநிலை ஆசிரியர், அரசினர் மேனிலைப்பள்ளி, உச்சிப்புளி, இராமநாதபுரம் மாவட்டம்

நன்றி : சர்வே ஆஃப் இந்தியா, யுனிசெப், என்.சி.இ.ஆர்.டி. புது தில்லி.

குடிமையியல்

# 1. உள்ளாட்சி

நமது இந்தியநாடு மிகப்பெரிய நிலப் பரப்பைக் கொண்டது. இங்கு மக்கள்தொகை மிக அதிகம். இங்கு வாழும் மக்கள் கிராமங்களிலும், பேரூர்களிலும், நகரங்களிலும் வாழ்கிறார்கள். இவ்வாறு பரந்து விரிந்த நிலப் பரப்பில் வாழ்கின்ற கோடிக்கணக் கானவர்களின் தேவைகள், பிரச்சனைகள் அனைத்தையும், மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள அரசுகளினால் மட்டுமே தீர்த்து வைக்க இயலுவதில்லை.

நாட்டின் தொலைதூரத்தில் உள்ள மக்களுக்குச் சேவை செய்வதற்கே உள்ளாட்சி நிருவாக அமைப்புகள் இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளன. அந்த உள்ளாட்சி அமைப்பைப் பற்றி இந்தப் பாடத்தில் படிக்க உள்ளோம்.

### செயல்பாடு

உனது ஊரின் பெயர் என்ன?

அந்தப் பெயர் எப்படி வந்தது? அதற்குப் பொருள், பெயர்க்காரணம் என்ன வென்று தெரியுமா? பாட்டி – தாத்தா – ஊர்ப் பெரியவர்களிடம் கேட்டு அறியலாம்.

சொல் அழகும் பொருளும் மிகுந்த ஊர்ப் பெயர்கள், தமிழ் நாட்டின் தனிச் சிறப்புகளுள் ஒன்று. ஊர்களின் பெயர்கள் சில வரலாற்றின் ஏடுகளில் இடம்பெறக் கூடியவை.

'கங்கைகொண்டசோழபுரம்',
'மலைபடிக்குறிச்சி',
'சேரன்மாதேவி',
'சான்றோர்பாளையம்',
'எப்போதும் வென்றான்',
'நல்லாண் பிள்ளை பெற்றாள்',
'பால் வார்த்து வென்றான்',
'திருச்சிற்றம்பலம்',
'மலையாண்டிப் பட்டணம்',
'பண்பொழில்' – இவை தமிழ்நாட்டில் சில ஊர்களின் பெயர்கள். இவற்றின் பெயர்க்காரணம் என்ன? என்று ஆசிரியர்களிடம் கேட்டறிந்து குழுக்களாக அமர்ந்து ஒரு குழுவுக்கு இருபது ஊர்கள் எனப் பெயர்க்காரணம் ஆராய்ந்தறிந்து எழுதுக.

“ஊராட்சி மன்ற அலுவலகம்” என்று எழுதிய பெயர்ப்பலகை பொருத்திய கட்டடம் ஒன்றை நீ கண்டிருப்பாய். ஊராட்சிமன்றத் தலைவர், துணைத்தலைவர், பகுதி (வார்டு) உறுப்பினர்களின் பெயர்களும் அதில் இடம்பெற்றிருக்கும்.

அதேபோல், ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, மாவட்ட ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளுடன் செயல்படுகின்றன. இந்த அமைப்பிற்கு 'உள்ளாட்சி நிருவாகம்' என்று பெயர். ஆங்கிலேய ஆட்சியாளர் 'ரிப்பன் பிரபு' என்பவர் உள்ளாட்சி அமைப்புமுறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்தினார். நாட்டு விடுதலைக்கு முன்பே உள்ளாட்சி நிருவாகம் நம்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

### கிராம ஊராட்சி

கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு கிராம ஊராட்சி ஆகும். இதன் தலைவர், பகுதி (வார்டு) உறுப்பினர்கள், (மன்ற உறுப்பினர்கள்) கவுன்சிலர் ஆகியோர் மக்களால் நேரடியாகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி உறுப்பினர்களுள் ஒருவரே துணைத்தலைவராக அவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

**ஊராட்சி மன்றத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள்**

- தெரு விளக்குகள் அமைத்தல்.
- ஊர்ச் சாலைகள் அமைத்தல்
- குடிநீர் வழங்குதல்
- கழிவு நீர்க்கால்வாய் அமைத்தல்.
- சிறிய பாலங்கள் கட்டுதல்.
- வீட்டுமனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்குதல்.
- கிராம நூலகங்களைப் பராமரித்தல்.
- தொகுப்பு வீடுகள் கட்டுதல்.
- இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு மைதானங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியன ஆகும்.

உனது ஊரில் தெருவிளக்குகள் எரியவில்லை; சாலை பழுதடைந்து கிடக்கிறது; குடிநீர்க் குழாயில் தண்ணீர் வரவில்லை; கழிவு நீர்க் கால்வாய் அடைப்பினால், தெருவில் கழிவுநீர் தேங்குகிறது எனில், குறைகளுக்குத் தீர்வு காண யாரிடம் முறையிடுவாய்?

மேற்குறித்த வேலைகளைச் செய்வதற்குப் பணம் வேண்டும் அல்லவா? அந்தப் பணத்தை யார் தருவார்கள்? மக்களாகிய நாம்தான்! நம்மிடமிருந்து வீட்டுவரி, குடிநீர்வரி, தொழில்வரி, சொத்துவரி போன்ற வரிகள் வசூலிக்கப் படுகின்றன. அந்நிதியிலிருந்து மேற்கண்ட பணிகளுக்குச் செலவிடப் படுகிறது.

**வருவாய்**

- வீட்டு வரி, தொழில் வரி, கடைகள் மீது விதிக்கப்படும் வரி.
- குடிநீர்க் குழாய் இணைப்புக் கட்டணம்.
- நிலா வரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு.
- சொத்துரிமை மாற்றத்தின் மீதான வரியிலிருந்து ஒரு பங்கு.

ஆகியவை கிராம வளர்ச்சிக்குச் செலவிடப்படுகின்றன.

இவற்றால் வரும் வருவாய் மட்டுமே போதாது. எனவே, மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்ட நிதிகளையும், மானியங்களையும், உதவித் தொகைகளையும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊராட்சிகளுக்கு வழங்குகின்றன.

## ஊர்மன்றக் கூட்டம்

ஒவ்வொரு கிராமத்திலும் 'ஊர் மன்றக் கூட்டம்' (கிராம சபை) அமைக்கப் பட்டுள்ளது. ஊராட்சி எல்லைக்குட்பட்ட மக்கள் அனைவரும் அதன் உறுப்பினர்கள்.



கிராமத்தின் வளர்ச்சிக்குரிய திட்டங்கள், ஆண்டு வரவு, செலவுத் திட்டங்கள், திட்டங்களின் பயனாளிகள் யார்? என்பது போன்ற அனைத்தும் ஊர்மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடைமுறைப்படுத்தப்படும்.

## செயல்பாடு

உங்கள் ஊராட்சியில் 'ஊர்மன்றக் கூட்டம்' நடைபெறும்போது பார்த்து இருக்கிறீர்களா? பெற்றோருடன் சென்று பாருங்கள். ஊர்மன்றக் கூட்டம் நடைபெறும் முறையைப் பார்த்தும் விவரங்களைக் கேட்டும் அறிந்து கொள்ளுங்கள்.

ஊர் மன்றக் கூட்டங்கள் ஆண்டுக்கு நான்கு முறை கூடுகின்றன:

ஜனவரி 26 - குடியரசு நாள்.
மே 1 - தொழிலாளர் நாள்.
ஆகஸ்ட் 15 - விடுதலை நாள்.
அக்டோபர் 2 - மகாத்மா காந்தி பிறந்த நாள்.

இந்த நான்கு நாட்களுமே பொதுவிடுமுறை நாள்கள். அனைவரும் கலந்து கொள்ள வசதியாக விடுமுறை நாள்களில் ஊர்மன்றக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. அரசு விடுமுறை நாள்களான இவை தவிர்த்த பிற

சமூக அறிவியல்

நாள்களிலும் ஊர்மன்றக் கூட்டங்களைக் கூட்டலாம். மிகவும் அவசரமாக ஏதேனும் திட்டங்களுக்கு ஒப்புதல் பெற வேண்டுமானால் சிறப்பு ஊர்மன்றக் கூட்டங்கள் கூட்டப்படும்.

உங்கள் ஊரிலுள்ள உள்ளாட்சி அமைப்பில் வேலை செய்பவரிடம் வரி விதிப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

### ஊராட்சி ஒன்றியம்

கிராம ஊராட்சிகள் பல ஒன்றிணைக்கப்பட்டு அமைக்கப்படுவது "ஊராட்சி ஒன்றியம்" ஆகும்.

தேர்தல் மூலம் ஐந்தாயிரம் மக்கள் தொகைக்கு ஒரு பிரதிநிதி வீதம் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இவர்களில் ஒருவர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவராக உறுப்பினர் களால் தேர்வு செய்யப்படுகிறார்.

### ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் பணிகள்

- ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரித்தல்.
- குடிநீர் வழங்குதல்.
- ஊரக மருத்துவமனைகளை ஏற்படுத்துதல்.
- தொடக்கப் பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்த்தல்.
- தாய் – சேய் நல விடுதிகளை நடத்துதல்.
- பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல்.
- கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துதல்.
- வேளாண்மைக் கருவிகள், உரங்கள் போன்றவற்றை வழங்குதல்.
- சமூகக் காடுகளை வளர்த்தல் – விரிவாக்குதல்.

### செயல்பாடு

ஆசிரியர் உதவியுடன் ஊராட்சி ஒன்றியத் தலைவர் / தலைவியை நேர்காணல் செய்யுங்கள். அவரது பணிகள், எதிர்காலத் திட்டங்களை எழுதிக் கொண்டு வந்து, வகுப்பில் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளை மேற்பார்வை செய்யவும், கண்காணிக்கவும் மாவட்ட நிருவாகத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உள்ளது.

மாவட்ட ஆட்சியர், திட்ட அலுவலர், அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் இந்த முகமை மூலமாகப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவர்.

### மாவட்ட ஊராட்சி

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகைக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அவர்களுள் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவராக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

### மாவட்ட ஊராட்சியின் கடமைகள்

மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங் களின் வளர்ச்சித் திட்டங்கள், மாவட்டச் சாலைகளின் மேம்பாடு குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல், வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் ஆகியன.

### செயல்பாடு

உன் மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி தெரிந்து கொள்க.

### மாவட்டத் திட்டக்குழு

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவரே இதன் தலைவராகவும் செயல்படுவார். இதன் உறுப்பினர்களை உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தேர்தல்மூலம் தேர்ந் தெடுக்கின்றனர். அந்தந்த மாவட்ட, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்குழுவில் உறுப்பினர்கள். மாவட்ட முழுமைக்குமான வளர்ச்சித் திட்டம் தயாரித்து, மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்பி வைப்பது மாவட்டத் திட்டக் குழுவின் கடமை ஆகும்.

| கிராமப்புற உள்ளாட்சி | | நகர்ப்புற உள்ளாட்சி |
|---|---|---|
| ஊராட்சி<br>ஊராட்சி ஒன்றியம்<br>மாவட்ட ஊராட்சி | ← உள்ளாட்சி → | பேரூராட்சி<br>நகராட்சி<br>மாநகராட்சி |

## பேரூராட்சி

பத்தாயிரம் மக்கள் தொகைக்கும் மேலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. இதன் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பேரூராட்சி நிருவாகத்தைச் செயல் அலுவலர் கவனித்துக் கொள்கின்றார்.

## நகராட்சி

ஓர் இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையுள்ள பேரூர்கள் 'நகராட்சிகள்' ஆகச் செயல்படுகின்றன. இவற்றின் தலைவரும், உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள். நகராட்சி ஆணையர் இதன் நிருவாக அலுவலர் ஆவார்.

## மாநகராட்சி

பல இலட்சம் மக்கள் தொகையும், பல்வேறு அலுவலகங்களும் அமைந்துள்ள பகுதிகளை மாநகராட்சிகள் எனச்



சென்னை மாநகராட்சிக் கூடம் (ரிப்பன் கட்டடம்)

சொல்கிறோம். மாநகராட்சித் தலைவர் 'மேயர்' எனப்படுகிறார். மாநகராட்சியின் நிருவாக அலுவலர் ஆணையர் எனப் படுகிறார். மாநகராட்சித் தலைவர், உறுப்பினர் ஆகியவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1. இந்தியாவில் இக்காலத்தில் செயற்படும் உள்ளாட்சி அமைப்பை முதன்முதலில் நடைமுறைப்படுத்தியவர்:

   அ. ரிப்பன் பிரபு   ஆ. காந்தியடிகள்   இ. இந்திராகாந்தி.

2. ஊராட்சி மன்றத் தலைவர்__________ஆல் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

   அ. பகுதி உறுப்பினர்கள்   ஆ. மக்கள்   இ. ஒன்றியத் தலைவர்.

II. நிரப்புக

1. மாநகராட்சித் தலைவரின் பதவிக்காலம் ________ ஆண்டுகள்.
2. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ________ ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது.

III. விடையளிக்க

1. உள்ளாட்சி அமைப்புகள் ஏன் தேவைப்படுகின்றன ?
2. ஊர்மன்றத்தின் பணிகள் யாவை ? ஆண்டில் எத்தனை முறை, எந்தெந்த நாள்களில் கிராமசபை கூடுகிறது ?
3. ஊராட்சி மன்றத்தின் பணிகளில் நான்கைக் கூறுக.
4. ஊராட்சியின் வருவாய் எந்தெந்த வழிகளில் கிடைக்கிறது ?
5. ஊராட்சி ஒன்றியம் எவ்வாறு அமைக்கப்படுகிறது ?

## உருவாக்க மதிப்பீடு

1. உன் உள்ளாட்சித் தலைவரிடம் நேர்காணல் செய்ய, வினாப்பட்டியல் தயாரிக்கவும்.
2. தேர்தலின் போது நடைபெறும் நிகழ்வுகளைக் கொண்டு நாடகம் தயாரிக்கவும்.
3. உன் உள்ளாட்சி தலைவரைச் சந்தித்தால் எந்தெந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கான விண்ணப்பங்களைத் தருவாய். மாதிரி விண்ணப்பம் ஒன்றைத் தயார் செய்க.
4. பள்ளியில் நிர்வாகம் சிறப்பாக நடைபெற பள்ளியில் எந்தெந்தக் குழுக்களை அமைக்கலாம்.
5. உன் உள்ளாட்சியைப் பற்றிய மனவரைபடம் ஒன்றைத் தயார் செய்யவும்.



# 2. மக்கள் ஆட்சியையும், மனித வளமும், மகளிர் அறிவாற்றலும்

ஒரு நாட்டின் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஆட்சியே மக்கள் ஆட்சி எனலாம். மக்கள் நடத்தும் ஆட்சியே 'குடியரசு', 'ஜனநாயகம்' எனப்படும்.

குடியரசில், குடிமக்கள் எல்லோரும் சம உரிமை உடையவர்கள். 18 வயதை அடைந்த அனைவருக்கும் வாக்குரிமை உண்டு.

மக்களாட்சி நாட்டில் அனைவரும் சமமான வாய்ப்புரிமை உடையவர்கள். அவ்வாறிருக்க மக்களுள் சரிபாதியாக உள்ள மகளிரைப் பின்னுக்குத்தள்ளுவதும் விலக்குவதும், மக்களாட்சியைப் பலவீனப்படுத்துவதாகும். மகளிரின் முழுமையான பங்கேற்புக்கு வாய்ப்பளிப்பது மக்களாட்சியை வலுப்படுத்துவதாய் அமையும்.

எல்லோருக்கும் சமமான வாய்ப்பு கிடைத்திட, ஆவனசெய்ய வேண்டும். சமுதாயத்தில் காரணங்கள் பலவற்றால் உருவாகியுள்ள உயர்வும், தாழ்வும் அகற்றப்பட வேண்டும். மக்களிடையே ஏற்றத்தாழ்வு பலவகையில் உருவாகின்றது. அப்படி உருவானவையே பிறப்பினில் மேல் சாதி, கீழ் சாதி என்னும் வேறுபாடும், தீண்டாமையும். செல்வர் – வறியவர்; முதலாளி – தொழிலாளி; ஆண்டான்–அடிமை; கற்றவர்–கல்லாதவர்; நிலவுரிமையாளர்–உழவர் போன்ற வேற்றுமைகளும் அவ்வாறே காலப்போக்கில் உருவாயின. குடிமக்களின் சமத்துவம் மக்கள் ஆட்சியின் அடிப்படைத் தேவையாகும்.

சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளால், வாழ்வதற்கு வேண்டிய நல்வாய்ப்புக்களை மிகப் பலர் காலங் காலமாக இழந்துள்ளனர். அவர்கள் இழந்துள்ள அந்த வாய்ப்புகளை அவர்கட்குக் கிடைக்கச் செய்வதன் மூலமே அவர்களை முழுவாழ்வு பெறச் செய்யமுடியும். அப்படிச் செய்வதால் சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, சமத்துவச் சமுதாயத்தை உருவாக்க முடியும்; அவ்வாறு செய்வதே சமூக நீதி வழங்குவதாகும்.

அதுபோன்றே, இயற்கையிலேயே ஆண், பெண் என இரு இயல்புகளுடன் பிறந்துள்ள மக்களிடையே, ஆண் உயர்வென்றும், பெண் தாழ்வென்றும் கருதும் மூடநம்பிக்கை, வேற்றுமையை வளர்க்கிறது. அவ்வேற்றுமை சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஆற்றலைத் (சக்தியை), திரண்ட மனித வளத்தை உருவாக்கத் தடைக்கல்லாய் அமைகிறது.

மகளிரின் இயல்பான பண்பைக் கொண்டு அவர்களை மெல்லியலார் என்று கூறுவதாலேயே, ஆடவரைவிட மகளிர் அறிவாற்றலில் குறைந்தவர் ஆவதில்லை. பொதுவாக, ஆடவர் உடல் வலிமையில் சிறந்தவர் என்றால், மகளிர் மனவலிமையில் சிறந்தவர்களாக உள்ளனர். உடல் வலிமையோ மனவலிமையோ தனிநபர் வேறுபாடே ஆகும்.

இஃது ஆண் பெண் என்ற வேறுபாட்டால் ஏற்பட்டதன்று. சமுதாயத்தில் வழிவழிவந்த பழக்கத்தால், ஆண்களுக்கே கல்வி கற்கும் வாய்ப்பு, ஊதியம் பெறும்

வாய்ப்பு, வேலை வாய்ப்பு, சொத்தினை நிருவகிக்கும் வாய்ப்பு ஆகியவை ஏற்பட்டன. இதனால் நாளடைவில் சமுதாயத்திலும் ஆண்கள்தான் தலைமை ஏற்று ஆட்சி நடத்தவும், அரசின் உயர் பதவிகளில் அமரவும் தகுதியுள்ளவர்கள் என்னும் தவறான மனப்பான்மை வளர்ந்து விட்டது.

மகப்பேறு காரணமாகக் குழந்தைகளை வளர்க்கும் கடமையுள்ள மகளிரை, வீடுகளில் இருந்து குடும்பப் பொறுப்புகளைக் கவனிப்பவர் என்றும், வீட்டுக்கு வெளியில் உள்ள பணிகளையும், கடுமையான வேலைகளையும் செய்ய ஆடவர்களே தகுதியானவர்கள் என்றும் நாம் நீண்ட நெடுங்காலமாகக் கருதி வருகின்றோம். மேலும், எந்தப் பெண்ணும் அவளுக்குத் தந்தை, கணவன், மகன் ஆகிய முறையுடைய ஆடவருள் ஒருவரைச் சார்ந்தே வாழவேண்டும் என்றும் நம்பிக்கொண்டு இருக்கிறோம். இந்த எண்ணம் பல தலைமுறையாகத் தொடர்ந்து வந்ததனால் பழகிப்போன ஒன்றாகும். சமுதாய வாழ்வில் காலங்காலமாகப் படிந்துள்ள இப்படிப்பட்ட கருத்துகளே, மாணவர் மனத்திலும் படிகின்றன.

மகளிரின் ஆற்றலும், திறமையும் பற்றித் தெளிய, நீண்ட காலமாகவே மகளிர் செய்துவரும் பல்வேறு வேலைகளைக் கருதிப்பார்த்தால் அவை விளங்கும்.

- வீட்டைப் பராமரித்தல், சமையல் செய்தல், வீட்டுப்பொருளாதாரத்தை உயர்த்துதல்.
- கால் நடைகளைப் பேணி வளர்த்து விருத்தி செய்தல், அதன் வழி குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
- கோரைப் பாய் நெசவு, பிரம்புக்கூடை பின்னுதல், துணி தைத்தல்.
- சுகாதாரம், துப்புரவுப் பணி, நோய்த் தடுப்பு, வீட்டு வைத்தியம்.
- மகப்பேறு, குழந்தைக்காப்பு, பிள்ளை வளர்ப்புப் பணி செய்தல்.
- வீட்டுத் தோட்டம், காய்கறி, பழம், பூ, கிழங்கு, பால் உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்.
- வீட்டுச் சிக்கனம், உறவை வளர்த்தல், சுற்றம் காத்தல்.
- வயல்வெளிப்பணிகள், தானிய சேகரிப்பு, விதைக்காப்புப் பணிகள்.

எனப் புத்தி கூர்மையும், பொறுமையும், நுட்பமும் திறமையும், நீண்ட நேர உழைப்பு தேவைப்படும் பணிகளையும் நெடுங்காலமாகச் செய்து வருகின்றனர்.

கல்வி வளர்ந்ததன் பயனாக ஆசிரியர் பணி, செவிலியர் பணி, தட்டச்சர் பணி, சுருக்கெழுத்தர் பணி, காவலர் பணி எனப் பல வகையிலும் ஈடுபட்டுச் சிறந்து விளங்குகின்றனர். சிறப்பாக மருத்துவர், பொறியாளர், விரிவுரையாளர், வழக்கறிஞர், நீதிபதிகள், ஊடக நிருபர்கள் என்னும் வேலைகளிலும், கலைத் துறையில், திரைப்படத்தில் நடிப்பவர்களாகவும் விளங்குகின்றனர். மகிழ்வுந்து (கார்), பேருந்து (பஸ்), சரக்குந்து (லாரி), உழவுந்து (டிராக்டர்) ஓட்டுவதுடன் வானூர்தி செலுத்துவதிலும், விண்வெளி ஓடத்தில் பயணம் செய்வதிலும், புதுமைகள் கண்டறியும் அறிவியல் ஆய்வுப் பணியிலும் ஆண்களுக்கு நிகராய் சிறந்து விளங்குகின்றனர். அரசு அலுவலர், வங்கி மேலாளர், மாவட்ட ஆட்சியர், காவல் துறைக் கண்காணிப்பாளராகவும் புகழ்பெற்று வருகின்றனர்.



இவ்வாறு பல்வேறு துறையிலும் பெண்கள் சிறப்பாகப் பணியாற்றுவதைக் கண்ட பிறகும், யார்தான் ஆண்கள் மட்டுமே செய்யக்கூடிய பணி இருப்பதாகக் கூறமுடியும்? பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்குவோர் பலர்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம் ;
வைய வாழ்வு தன்னி லெந்த
வகையி லும்ந மக்குளே
தாத ரென்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வ மிந்த நாட்டிலே!"

என்று **தேசியகவி பாரதியார்** பாடியுள்ள பாடலடிகள், எத்துறையிலும் ஆண்களுக்குப் பெண்கள் தாழ்ந்தவர் இல்லை என்பதைக் காட்டுவதன்றோ?





டாக்டர் முத்துலெட்சுமி

## மகளிர் குலத் திலகம் டாக்டர் முத்துலெட்சுமி

மகளிரின் அறிவாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர்தான் மகளிர் குலத்திலகம் டாக்டர் முத்துலெட்சுமி 1886ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30ஆம் நாள், புதுக்கோட்டை சிற்றரசில் பிறந்தார். அவர் படிக்கும்போதே சிறப்புற்று விளங்கினார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற்கேற்ப இளமையிலேயே புத்தி கூர்மையுடன், எதையும் பகுத்தறிந்து உண்மை அறியும் ஆர்வம் கொண்டிருந்தார்.

அவரது சமூகப் பழக்கத்தின்படி பள்ளிக்குச் சென்றுபடிப்பது தடுக்கப்பட்ட காலத்தில் வீட்டிலேயே தனி ஆசிரியர்களிடம் படித்தும் பள்ளி இறுதித் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். ஆண்கள் மட்டுமே படித்த புதுக்கோட்டை கல்லூரியில் முதன் முதல் இடம்பெற்ற ஒரே மாணவி அவர். அவர் இயல்பாகவே, நீதி நியாயங்களை நிலை நாட்டுவதில் ஆர்வமும், இரக்க உணர்வும், மனித நேயமும் கொண்டு, நல்ல பண்பாளராகத் திகழ்ந்தார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் 1912 ஆம் ஆண்டில் மருத்துவராகப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி அவர். அக்கால ஆங்கிலேய அரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் இடம்பெற்ற, சென்னைச் சட்டமன்றத்தில் நியமிக்கப் பெற்ற முதல் பெண்மணியாகவும், பின்னர் அந்த மன்றத்தின் துணைத் தலைவராகவும் விளங்கிச் சிறப்பாகக் கடமையாற்றினார். ஆடவரைப் போன்றே மகளிருக்கும் வாக்குரிமையும், சொத்துரிமையும் அளிக்க வேண்டும் என்று கேட்டவர் அவர்.

அகில இந்திய மகளிர் மன்றத்தின் முதல் தலைவராகவும், சென்னை நகராட்சியின் முதல் அதிகாரியாகவும் அவர் தேர்வு செய்யப்பட்டுப் பலரும் பாராட்டுமாறு பணி செய்தார். விடுதலை இயக்கத் தலைவர்களின் போராட்ட உணர்வை மதித்த அம்மையார் கவி பாரதியையும் அறிந்தவராக இருந்தார்.

சமுதாயத்தில், பெண்கள் தலைமுறை தலைமுறையாகப் பல கொடுமைகளுக்கு ஆளாவதைக் கண்டு வேதனையடைந்த அவர், மகளிர்

கண்ணீரைத் துடைக்க உறுதி பூண்டார். பெண்கள் கல்வி கற்கும் உரிமை, பெண்களுக்கு ஆண்களைப் போன்று வாழும் சமத்துவ உரிமை, பெண்களுக்குச் சுதந்தரமான வாழ்வு, பெண் குழந்தைகளைக் காத்தல், பெண்கள் முன்னேற்றத்திற்கு வழிசெய்தல் எனப் பல்வேறு நோக்கங்களுக்காகவும் பாடுபட்டார்.

கொடிய புற்றுநோயால் துன்புற்று மடியும் மகளிர் வேதனையைத் துடைக்க, லண்டனில் இருந்த ராயல் புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்று அங்கு வழங்கும் சிகிச்சை முறையைப் பயின்று வந்து, சென்னை, அடையாறில் ஒரு புற்றுநோய் மருத்துவமனையைத் தொடங்கி, அதன் மூலம் மகளிர் குலத்துக்கு அரும்பணி ஆற்றினார். இன்றும் அந்த மருத்துவமனை பெரும் வளர்ச்சியுற்று, அவரது பேரும், புகழும் விளங்கச் செயற்படுகிறது.

விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோர் நலன் காத்திடுவதற்கென்று, தாம்பரத்தில் அரசு உதவியுடன் மகளிர் புனர்வாழ்வு இல்லம் ஒன்றைத் தொடங்க வழிசெய்தார். நாட்டில் சிறுவயதிலேயே பெண்குழந்தைகட்குத் திருமணம் செய்யும் தீமை பரவலாக நடைபெற்றதால், அதைத் தடுத்திடுவதற்கு வழிசெய்திட அரசுக்கு எடுத்துக்கூறி, சிறு வயதினர் திருமணத் தடைச் சட்டம் கொண்டுவரச் செய்தார்.

தேவதாசியாவது தெய்வப் பணிக்காக என்னும் நம்பிக்கை இருந்ததால் அக்காலச் சமுதாயத்தில், இளம் பெண்களுக்குப் பொட்டுக் கட்டித் திருக்கோயில்களில் தேவதாசிகளாக தொண்டு செய்ய அனுப்பிவிடும் வழக்கம் தலைமுறை, தலைமுறையாக நிலவியதால், நாடெங்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் 'தேவதாசி' என்னும் பெயரில் சீர்குலைந்த வாழ்வுக்கு ஆளாக்கப்பட்டனர்.

இதனால் பெரும் தீமைக்கு ஆளாகாமல் பெண்களைக் காத்திடுவதற்கு முனைந்து, சட்டமன்றத்தில் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தார். அதைநிறைவேற்றவிடாமல் தடுக்க, மத வெறியர்களும், பழமைவாதிகளும் எதிர்த்து வாதாடினார்கள். அந்நிலையில் சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா அவர்களுடைய ஆதரவுடனும், வழிகாட்டுதலுடனும், சட்டமன்றத்தில் தொடர்ந்து வாதாடி தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தை அவர் நிறைவேற்ற வைத்தார். அக்காலத்தில் பெரியார் ஈ.வெ.ரா அவர்களுடன், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களும் இந்தச் சட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துக்கூறி, பொதுமக்களின் பேராதரவைத் திரட்ட வேண்டியிருந்தது என்பதிலிருந்து அக்காலச் சூழ்நிலை விளங்கும்.

அம்மையார் தம் வாழ்நாளில் செய்த தொண்டுகள், சமூகநலப் பணிகள் பலப்பல. நாட்டில் ஆதரவற்றோருக்கான இல்லங்களைத் தொடங்கியதுடன், குடிசைவாழ் மக்களின் வறிய நிலைகண்டு, அவர்கட்கு மருத்துவ உதவியும், சுகாதார வாழ்வும் கிடைப்பதற்கும் வழிசெய்திட அதற்கு ஏற்ற நிறுவனங்களை உருவாகச்செய்து அவற்றின் மூலம் பணி செய்தார். கைவிடப்பட்ட பாதுகாப்பற்ற பெண்களைக் காத்திட 1930ஆம் ஆண்டில் அடையாற்றில் 'ஔவை இல்லம்' தொடங்கினார்.

பெண்களுக்கு எட்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்க வழிசெய்தார். சமுதாயச் சேவையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்த மகளிர் குலத்திலகம் டாக்டர் முத்துலெட்சுமி அவர்கட்கு, நடுவண் அரசு 1956 இல் 'பத்மபூஷன்' விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

அவர்தம் பேரும், புகழும் என்றும் ஒளிவிடுமாறு, அம்மையாரின் பெயரில் தாய், சேய் நலன் காக்கும் நோக்குடன், கருவுற்ற தாய்மார்கட்கு நல்ல சத்துணவு கிடைத்திட வழிசெய்ய மகப்பேறுக்கு முன் மூன்று மாதத்திற்கும், பின் மூன்று மாதத்திற்கும் உதவித்தொகை வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தெரிவுசெய்க.

1) குடியரசில் குடிமக்கள் எல்லாரும்

(அ) சம முதலீட்டாளர்கள் (ஆ) சம சொத்துடையவர்கள்

(இ) சம உரிமை உடையவர்கள்

2) இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்

(அ) முத்துலட்சுமி அம்மையார் (ஆ) விஜயலட்சுமி பண்டிட்

(இ) கல்பனா சாவ்லா

3) பெண்களால் செய்ய முடியாத பணி

(அ) கிரிக்கெட் ஆடுதல் (ஆ) விமானம் ஓட்டுதல்

(இ) ஏதும் இல்லை

4) ஔவை இல்லம் என்பது

(அ) கைவிடப்பட்ட விதவைப் பெண்களின் காப்பகம்

(ஆ) கைவிடப்பட்ட சிறுமியர் காப்பகம் (இ) வேலையில்லாத இளம்பெண் காப்பகம்

### II. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குவதே ______________ ஆகும்.

2. ஆண், பெண் இருபாலருக்கும் வாக்குரிமை வயது ______________ .

3. மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனப்பாடியவர் ______________ .

### III. பொருத்துக

1. சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதே – காலங்காலமாகப் பதிந்த எண்ணம்.
2. ஆண்கள் மட்டுமே அனைத்துப் பதவிக்கும் ஏற்றவர்கள் – முத்துலட்சுமியின் புகழைப் பரப்புகிறது.
3. பெண், ஆடவரைச் சார்ந்தே வாழ்பவர் – தவறான மனப்பான்மை.
4. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க – சமூக நீதி.
5. அடையாறு புற்றுநோய் மருத்துவமனை – தடைச்சட்டம் கொண்டுவந்தார்.

### IV. விடை தருக.

1. மனித வளத்தை வளர்க்கத் தடையாய் அமைவது எது ?
2. பெண்களால் செய்யப்படும் உடலாற்றலும் அறிவாற்றலும் தேவைப்படும் பணிகள் ஏதேனும் எட்டு எழுதுக.
3. தாய்சேய் நலம் காத்திடும் தமிழக அரசின் நலத்திட்டம் யாது ?
4. டாக்டர் முத்துலட்சுமி இந்தியாவில் முதன்முதலாகச் செய்த சாதனையை எழுதுக.
5. டாக்டர் முத்துலட்சுமிக்கு நடுவண் அரசால் என்னவிருது வழங்கப்பட்டது ?
6. பெண்கள் சமத்துவம் எவ்வாறெல்லாம் நிராகரிக்கப்படுகிறது ?

## உருவாக்க மதிப்பீடு

1. நூலகத்திற்குச் சென்று பின்வரும் தலைவர்களைப் பற்றிய நூல்களைப் படிக்கவும்.
   அ). ஈ.வெ.ரா.
   ஆ). மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.
2. உனக்குத் தெரிந்தவர்களுள் சாதனை புரிந்த பெண்மணியாக யாரைக் கருதுகிறாய் ? ஏன்? எனக் கூறவும்.
3. இந்திய அரசின் உயர் விருதுகளைப் பட்டியலிடுக.
4. பெண்கள் சம உரிமைப் பெற்றுள்ளனர் ! பெறவில்லை ! பட்டிமண்டபம் நடத்துக.

5. டாக்டர் முத்துலெட்சுமியைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை நிறைவு செய்க.

1. பெயர்

2. பிறந்தநாள்

3. பிறந்த இடம்

4. படித்த கல்லூரிகள்

    1.

    2.

5. வகித்த பதவிகள்

    1.

    2.

    3.

6. தோற்றுவித்த மருத்துவமனை

7. பெற்ற விருது / ஆண்டு

8. அவர் செய்த தொண்டுகளில் உனக்கு மிகவும் பிடித்தது.

புவியியல்

# 1. நாம் வாழும் பூமி

உனது ஊரில் மலை இருக்கிறதா? கடல் இருக்கிறதா? ஆறு இருக்கிறதா?

மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் ஆகியவை பூமியின் முக்கிய நில அமைப்புகள் ஆகும். உயரமான முகடுகளுடன் கூடிய நில அமைப்பே மலை. பல மலைகள் தொடர்ச்சியாக அமையும்போது அது மலைத்தொடர் என வழங்கப்படுகிறது. உலகில் மிக உயரமான மலைத்தொடர் இமயமலைத் தொடர் ஆகும்.

★ இந்திய நில வரைபடத்தைப் பார். இந்தியாவில் உள்ள வேறு ஒரு மலைத் தொடரைக் கண்டறிக.

சுற்றியுள்ள நிலப்பகுதிகளைவிடச் சற்றே உயரமாகவும் அதன் மேற்பகுதி தட்டையாகவும் உள்ள நிலஅமைப்பு பீடபூமி எனப்படுகிறது. திபெத் பீடபூமிதான் உலகின் மிக உயரமான பீடபூமி ஆகும்.

★ தென் இந்தியாவில் உள்ள பீடபூமி எது? ஆசிரியரின் உதவியுடன் இனம் காண்க.

பரந்து விரிந்த தாழ்வான சமமான நிலப்பரப்பு சமவெளி எனப்படுகிறது. கங்கை ஆறு பாயும் வட இந்தியப் பகுதி உலகின் முக்கிய சமவெளிகளில் ஒன்று.

★ தமிழகத்தில் காவிரி மற்றும் தாமிரபரணி ஆற்றின் கரையில் உள்ள சமவெளிகளை இனம் காண்க. நில வரைபடத்தைப் பார்த்துக் கண்டுபிடி.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, ஊட்டி, கொடைக்கானல், தேனி போன்ற பல்வேறு ஊர்களைக் கொண்டது நமது தமிழகம். தமிழகம் இந்தியாவின் ஒரு பகுதி.

★ இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் முதலிய நகரங்கள் எத்தகைய நில அமைப்பில் உள்ளன? கண்டுபிடிக்க.

★ உனது ஊர் எங்கே அமைந்துள்ளது? சமவெளியிலா, மலைப்பாங்கான பகுதியிலா? பீடபூமியிலா? ஆசிரியர் உதவியுடன் கண்டுபிடி.

இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற பல நாடுகள் ஆசியாவில் உள்ளன. இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகள் உள்ள நிலப்பகுதி ஐரோப்பாக் கண்டம் எனக் கூறப்படுகிறது.

ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அண்டார்டிகா என மொத்தம் ஏழு கண்டங்கள் உலகில் உள்ளன. கடல்கள் இன்றித் தொடர்ச்சியான அகண்ட நிலப்பரப்புகள் தாம் கண்டங்கள் எனப்படுகின்றன.

## ஏழு கண்டங்கள்

### 1. ஆசியா :

ஏழு கண்டங்களில் மிகப் பெரியது ஆசியா. இது பூமியின் வடஅரைக் கோளத்தில் உள்ளது. நாம் வாழும் இந்தியா ஆசியாக் கண்டத்தில் உள்ளது. கோபி குளிர்ப்பாலைவனம், உயரமான இமயமலைத்தொடர் முதலியவை இக்கண்டத்தில் உள்ளன.


இமயமலை

# உலக வரைபடம்




ஏழு கண்டங்களும்
ஐந்து பெருங்கடல்களும்



ஆப்பிரிக்கா – சகாராப் பாலைவனம்

**2. ஆப்பிரிக்கா:** பரப்பளவில் இது இரண்டாவது பெரிய கண்டம் ஆகும். இந்தக் கண்டம் வட அரைக் கோளத்திலும், தென் அரைக்கோளத்திலும் பரவியுள்ளது. நிலநடுக்கோடு இந்தக் கண்டத்தை இரண்டாகப் பிரிக்கிறது.

உலகில் மிக நீளமான நைல் நதி (6695கி.மீ.) இக்கண்டத்தில் பாய்கிறது. மிகப் பெரிய பாலைவனமான சகாராவும் இக்கண்டத்தில் தான் உள்ளது. அடர்ந்த காடுகள் மற்றும் கனிம வளங்களின் செறிவுமிக்கது இக்கண்டம்.

**3. வடஅமெரிக்கா :** அட்லாண்டிக், பசிபிக் மற்றும் ஆர்டிக் பெருங்கடல்களால் சூழப்பட்ட கண்டம் இது. இதன் மேற்குப் பகுதியிலுள்ள ராக்கி மலைத்தொடர் மிகநீண்ட மலைத்தொடர்.

**4. தென்அமெரிக்கா:** இக்கண்டம் பெரும்அளவு தென்அரைக்கோளத்தில் அமைந்துள்ளது. உலகின் நீளமான ஆண்டிஸ் மலைத்தொடர், இந்தக் கண்டத்தில்தான் உள்ளது. உலகின் மிக அகன்ற அமேசான் ஆறு (6586கி.மீ. நீளம்) இக்கண்டத்தில் உள்ளது.

**5. ஐரோப்பா:** ஆசியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கண்டம் இது. ஆல்ப்ஸ் மலைத்தொடர் ஐரோப்பாவில் உள்ளது.

**6. ஆஸ்திரேலியா :** நான்கு பக்கமும் கடல்களால் சூழப்பட்ட ஆஸ்திரேலியா ஒரு தீவுக் கண்டம் (Island Continent). இக்கண்டம் நியூசிலாந்து, பிஜி போன்ற பல தீவுகளைக் கொண்டது. பிஜித் தீவுகள், பாப்புவா, நியூகினியா முதலிய தீவுகள் பொதுவாக ஒசியானியத் தீவுகள் என அழைக்கப்படுகின்றன. கிரேட் பாரியர் ரீப் எனப்படும் உலகின் மிகப்பெரிய பவளப் பாறை ஆஸ்திரேலியக் கடற்கரையில் உள்ளது.

**7. அண்டார்டிகா :** தென்துருவப் பகுதியில் உள்ள இக்கண்டம் முழுவதும் பனி படர்ந்துள்ளது. இது மிகக் குளிர்ந்த பகுதி. பென்குயின் பறவை, சீல் போன்ற உயிரினங்களின் வாழ்விடம் இது.

இங்கு ஆய்வுகள் மேற்கொள்வதற்காக 'தட்சிண் கங்கோத்ரி' மற்றும் 'மைத்ரேயி' எனும் ஆய்வுக் குடியிருப்புகளை நம் நாடு நிறுவியுள்ளது. ஆண்டு முழுவதும் இந்திய விஞ்ஞானிகள் பலர் இங்கு ஆய்வு செய்து வருகின்றனர்.



அண்டார்டிகா – மைத்ரேயி குடியிருப்புகள்

**தீவு:** நான்கு பக்கங்களும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதியைத் தீவு எனக் கூறுகிறோம். இலங்கை ஒரு தீவு. பல தீவுகள் சேர்ந்து அமையப் பெற்றால் அவை தீவுக் கூட்டங்கள் எனப்படுகின்றன.

★ இந்தியாவில் உள்ள ஒரு தீவுக் கூட்டத்தை இனம் காண்க.




### பெருங்கடல்கள்:

பூமியின் மேற்பரப்பில் சுமார் 71 சதவீதம் (மூன்றில் இரண்டு பங்கு) நீர் உள்ளது. பெருந்திரளான நீர்ப்பரப்புத் தொகுதியைப் பெருங்கடல் என்கிறோம். மலை, சமவெளிபோல பூமியின் மேற்பரப்பில் அமைந்துள்ள மற்றொரு கூறு கடல் பகுதியாகும்.

உலகில் ஐந்து பெருங்கடல்கள் உள்ளன. அவை பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், ஆர்டிக் பெருங்கடல் மற்றும் அண்டார்டிக் பெருங்கடல்.

பெருங்கடல்களை வசதிக்காகக் கடல்கள் எனப் பிரித்து வகுத்துக் கொள்கிறோம். தமிழகத்தின் கிழக்கே உள்ள பகுதியை **வங்காள விரிகுடா** எனவும், கேரளத்தின் மேற்கே உள்ள கடல் பகுதியை **அரபிக்கடல்** எனவும் கூறுகிறோம்.

> ★ உலகில் உள்ள வேறு ஏதேனும் இரண்டு கடல் பகுதிகளை உலக வரைபடத்திலிருந்து இனம் காண்க.

**1. பசிபிக் பெருங்கடல் :** உலகின் ஆழமான பெருங்கடல் பசிபிக் பெருங்கடல்தான். இங்குத் தொடர்ச்சியான தீவுக் கூட்டங்கள் அமைந்துள்ளன. பெரும்பான்மையான தீவுகளில் செயல்படும் எரிமலைகள் நெருப்புக் குழம்பைக் கக்குவதால் இப்பகுதி பசிபிக் நெருப்பு வளையம் **(Pacific Ring of Fire)** என்று அழைக்கப்படுகிறது. உலகின் மிக ஆழமான **மரியானா அகழி** (Mariana Trench) எனும் கடல்பகுதி இப்பெருங்கடலில்தான் உள்ளது. இந்த 'மரியானா அகழி' எனும் பள்ளத்திற்குள் இமயமலையின் எவரெஸ்டு சிகரம்கூட அமிழ்ந்துவிடும்; அவ்வளவு ஆழம்!

**2. அட்லாண்டிக் பெருங்கடல்:** இது உலகின் இரண்டாவது பெருங்கடல். மிக வலிமை கொண்ட **சூறாவளிகள்** இப் பெருங்கடலில்தான் அதிகமாகத் தோன்றுகின்றன.

**3. இந்தியப் பெருங்கடல்:** இது உலகின் மூன்றாவது பெரிய பெருங்கடல். இப்பெருங்கடலில் உருவாகும் பருவக் காற்று, மழையினால்தான் இந்தியா வளம் பெறுகிறது.


**4. அண்டார்டிக் பெருங்கடல்:** தென்துருவப் பகுதியில் உள்ள அண்டார்டிகா கண்டத்தைச் சுற்றிப் பரந்துள்ள கடல் **தென் பெருங்கடல்** எனப்படுகிறது. இதனை அண்டார்டிக் பெருங்கடல் என்றும் அழைப்பர்.

**5. ஆர்டிக் பெருங்கடல்:** வடதுருவப் பகுதியில் அமைந்துள்ள மிகச் சிறிய பெருங்கடல் ஆர்டிக் பெருங்கடல் ஆகும். இங்குப் பனிப்பாறைகள் மிகுந்துள்ளன.

### நிலம், நீர், காற்று

கடல் தவிர ஆறு, குளம், குட்டை, ஏரி அணப் பலவகையான நீர் நிலைகள் உள்ளன. அவைமட்டுமல்ல. இமயமலை **முகடு (Peak)**, வடதுருவ ஆர்டிக் பகுதி, தென்துருவ அண்டார்டிக் பகுதி ஆகிய இடங்களில் நீர் திரவமாக இல்லாமல் **பனி** வடிவில் உறைந்துள்ளது. நீர் காற்றில் ஈரப்தமாகவும், மேகத்தில் நீராவியாகவும், உள்ளது. எனவே நீரானது பூமியில் திட, திரவ, வாயு வடிவில் காணப்படுகிறது. பூமியின் பரப்பில் நிலம் மற்றும் நீர் தவிரக் காற்றும் உள்ளது. தென்றல் தீண்டும்போதும், புயல் வீசும்போதும்தான் நாம் அவற்றை உணர்கிறோம். என்றாலும் நம்மை எப்போதுமே காற்று சூழ்ந்துள்ளது.

நிலப்பகுதிகள்கொண்ட பூமியின் மேற்பகுதி நிலக்கோளம்(Lithosphere) எனவும், நீர் தேங்கிய பகுதிகள் நீர்க்கோளம் (Hydrosphere) எனவும், காற்று படர்ந்த பகுதி வளிமண்டலம் (Atmosphere) எனவும் கூறப்படும்.




நிலம், நீர், காற்று தவிரப் பூமியின் சிறப்பு அதன்மீது பரவியுள்ள உயிர்கள் தாம். தாவரம், விலங்கு, நுண்உயிரிகள் என இலட்சக்கணக்கான உயிர்கள் பூமியின் மேற்பரப்பில் வாழ்கின்றன.

இவ்வாறு உயிர்கள் செறிந்த பகுதி உயிர்க்கோளம் எனவும் வழங்கப்படுகிறது. நிலக்கோளம், நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலம் எனும் மூன்று கோளங்களின் கூட்டு விளைவுதான் உயிர்க்கோளம் (Biosphere)ஆகும்.

எனவே நிலம், நீர், காற்று ஆகியவற்றில் எதில் மாசு ஏற்பட்டாலும் உலகில் உள்ள உயிர்கள் பாதிப்பு அடையும்.

மரம், செடி, கொடி, புழு, பூச்சி, பறவை, விலங்குகள், நுண்ணுயிரிகள் என எல்லா வகை உயிர்களும் உயிர்க்கோளத்தில்தான் உள்ளன.

வளிமண்டலத்தில் பல கிலோ மீட்டர் உயரம் வரை நுண்ணுயிரிகள் காணப்படுகின்றன. கடலில் மீன்கள் மட்டுமல்லாமல், மீன்களுக்கு உணவாக உள்ள பிளாங்க்டன் எனப்படும் கடல் உயிரிகளும் உள்ளன.

### தெரிந்து கொள்வோம்




மூன்று பக்கங்கள் நீராலும், ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்ட பகுதிக்குத் தீபகற்பம் என்று பெயர். நம் இந்தியா ஒரு தீபகற்பம் (Peninsula).



மூன்று பக்கங்களும் நிலமாகவும், ஒரு பக்கம் கடலாகவும் அமைந்த நீர்ப் பரப்புக்கு விரிகுடா (Bay) என்று பெயர். வங்காள விரிகுடா இதற்கு ஓர் உதாரணம். அளவில் சற்றே சிறியதாக இருந்தால் இதனை வளைகுடா (Gulf) எனவும் அழைப்பர். வளைகுடா நாடுகள் எவை ?

ஏன் இவை இப்பெயரில் அழைக்கப்படுகின்றன ? உலக வரைபடத்தைப் பார்!




இரண்டு நீர்ப் பரப்புகளை இணைக்கும் குறுகிய நீர்ப்பகுதிக்கு நீர்ச்சந்தி என்று பெயர். இந்தியா, இலங்கை இரண்டுக்கும் இடையில் உள்ளது பாக் நீர்ச்சந்தி (Palk Strait)

விரிந்த இரண்டு நிலப்பரப்புகளுடன் மிகக் குறுகிய நிலப்பரப்பு இணைந்திருந்தால் அதனை நிலச்சந்தி (Isthmus) என அழைப்பர். தென்அமெரிக்கா மற்றும் வடஅமெரிக்காவை இணைப்பது பனாமா நிலச்சந்தி ஆகும்.




பல ஆயிரம் மீட்டர் ஆழத்தில் கடலுக்கு அடியில் உள்ள வெந்நீர்ச் சுரங்கத்திற்கு அருகில் பல்வேறு உயிரிகள் உள்ளன. மணலில் பல அடி ஆழம்வரை புழு மற்றும் நுண்ணுயிரிகள் உள்ளன. தரைமீது பற்பல விலங்குகள், தாவரங்கள் உள்ளன.

நிலக்கோளம், நீர்க்கோளம் மற்றும் வளிமண்டலம் ஆகிய மூன்றும் தனித்தனியே இல்லை. இவை தம்முள் பிணைந்து இயங்குகின்றன.

எடுத்துக்காட்டாக, கடல்நீர் ஆவியாகி வளிமண்டலத்தில் கலக்கிறது. சூரிய வெப்பத்தால் நிலம் சூடேறுகிறது. இதன் காரணமாக, நிலத்தின் மீது உள்ள காற்று வெப்பமடைகிறது.

வெப்பமடைந்த காற்று மேலே செல்வதால் வளிமண்டத்தில் காற்றில் சலனம் ஏற்படுகிறது. இதனாலேயே காற்று மற்றும் தென்றல் வீசுகிறது. நிலம், நீர், காற்று இவை மூன்றும் இணைந்து தாவர வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன.

## பூமியின் உள்ளே




### பூமியின் உள்ளே

ஆப்பிள் பழத்தைக் குறுக்கே வெட்டினால் தோல், சதைப்பகுதி மற்றும் மையத்தில் விதை புலப்படுகிறது. அதுபோலப் பூமியைக் குறுக்காக வெட்டினால் எப்படி இருக்கும் ?

பூமியின் மையப்பகுதி குழம்பு போன்று உள்ளது..

இரும்பு, நிக்கல், போன்ற உலோகங்கள் இந்த மையப்பகுதியில் செறிவாக இருக்கின்றன இதனைப் பூமிக்கரு(Core) எனக் கூறுகிறோம்.

இங்கு வெப்பம் மிகுந்த உலோகக் குழம்பு சூழ்ந்து காணப்படுகிறது. இங்குள்ள வெப்பத்தின் அளவு சுமார் 5000° செல்சியஸ் இருக்கலாம்.

மையக்கருவிற்குமேல் **மென் இடைமண்டலம் (Mantle)** என்ற அடுக்கு இருக்கிறது. பூமியின் 85 விழுக்காட்டுக் கனிமப் பொருள்கள் இந்த அடுக்கில்தான் உள்ளன. இந்த அடுக்கு முழுவதும் பாறைப்பொருள்கள் இளகிய நிலையிலும் திட நிலையிலும் நிறைந்துள்ளன.

ஆப்பிளின் தோல்போல மிக மெல்லிய மேல் அடுக்கு **பூமி ஓடு (Crust)** எனப்படுகிறது. கடல்களும் கண்டங்களும், இந்த மேலோட்டில்தான் அமைந்துள்ளன. பெருங்கடல் அடியில் ஓட்டின் தடிமன் சுமார் 5 முதல் 10 கி.மீ.வரை மட்டுமே. ஆனால், கண்டங்கள் உள்ள பகுதியில் ஓட்டின் தடிமன் சுமார் 30 முதல் 50 கி.மீ. வரை ஆகும்.

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி__________
   அ. நீர்ச்சந்தி ஆ. தீவு இ. தீபகற்பம்
2. உலகின் மிக ஆழமான மரியானா அகழி அமைந்துள்ள பெருங்கடல்__________
   அ. பசிபிக் ஆ. அட்லாண்டிக் இ. ஆர்டிக்
3. இலங்கை ஒரு__________
   அ. தீவு ஆ. தீபகற்பம் இ. நீர்ச்சந்தி

### II. விடை தருக.

1. சமவெளிக்கும், பீடபூமிக்கும் உள்ள நில அமைப்பு வேறுபாடு யாது ?
2. தீபகற்பம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக.
3. பூமியை உயிர்க்கோளம் என்று ஏன் அழைக்கிறோம் ?
4. ஐம்பெரும் கடல்கள் யாவை?
5. நீர்ச்சந்தி என்றால் என்ன ?
6. விரிகுடா என்றால் என்ன ?

### III. வரைபடப் பயிற்சி.

1. உலக வரைபடத்தில் கண்டங்கள் மற்றும் பெருங்கடல்களைக் குறிக்கவும்.
2. உலக வரைபடத்தில் தீபகற்பம், விரிகுடா / வளைகுடா, நீர்ச்சந்தி, நிலச்சந்தி மற்றும் தீவுகளைக் குறிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு

1. அட்லஸ் துணைகொண்டு கண்டறிந்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தீவுகள் | ______ | ______ | ______ |
| தீபகற்பம் | ______ | ______ | ______ |
| வளைகுடா | ______ | ______ | ______ |
| விரிகுடா | ______ | ______ | ______ |
| நீர்ச்சந்தி | ______ | ______ | ______ |

2. வினாடி – வினாவிற்கான வினாக்களைத் தயாரித்து வினாடி–வினா நடத்துக.

3. கொப்பரைத் தேங்காய் / தேங்காய் ஓடு கொண்டு புவியின் அமைப்பின் மாதிரி தயாரிக்கவும்.

4. நாம் வாழும் பூமி தற்போது எவ்வாறெல்லாம் மாசடைகிறது ? குறைப்பதற்கான வழிமுறைகளை விவாதிக்கவும்.


5. சொற் புதிர்.

இடமிருந்து வலமாக


1. உலகின் மிக நீளமான நதி
2. மிகப் பெரிய பாலைவனம்
3. தீவுக் கண்டம்
4. நீரால் சூழப்பட்ட நிலப்பகுதி

மேலிருந்து கீழ்

5. உலகின் மிகப்பெரிய கண்டம்
6. மிக உயரமான மலைத்தொடர்
7. உலகின் ஆழமான பெருங்கடல்
8. உலகின் மிக அகன்ற ஆறு.
9. மிக நீண்ட மலைத்தொடர்
10. உலகின் உயரமான பீடபூமி




பயிற்சி 1




உலக வரைபடத்தில் கண்டங்களையும் பெருங்கடல்களையும் குறிக்கவும்.

பயிற்சி 2

## உலக வரைபடம்





உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் கண்டறிந்து எழுதுக.

| தீபகற்பம் | விரிகுடா / வளைகுடா | நீர்ச்சந்தி | நிலச்சந்தி | தீவு |
|---|---|---|---|---|
| 1. .................. | 1. .................. | 1. .................. | 1. .................. | 1. .................. |
| 2. .................. | 2. .................. | 2. .................. | 2. .................. | 2. .................. |
| 3. .................. | 3. .................. | 3. .................. | 3. .................. | 3. .................. |
| 4. .................. | 4. .................. | 4. .................. | 4. .................. | 4. .................. |

# 2. வரைபடங்களும் உலக உருண்டையும்

## பூமியின் வடிவம்

நாம் வாழும் பூமியின் வடிவம் என்ன ? அது பந்துபோல வடிவம் கொண்டதா? ஆரஞ்சுப்பழம் போலக் கோள வடிவமா? அதன் உண்மையான வடிவம் என்ன ?



17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை பூமியின் மிகச் சரியான வடிவத்தை அறியாமல் பல தவறான கருத்துகளைக் கொண்டிருந்தனர். ஆனால், விண்வெளிக்கு எரி ஊர்தி (ராக்கெட்) களையும் விண்கலங்களையும் நாம் அனுப்பினோம்.



உயரத்திலிருந்து பூமியைப் பார்க்க முடிந்த பிறகே பழைய கருத்துகள் மாறின. எந்த ஒரு பொருளையும் கண்ணுக்கு மிக அருகில் வைத்துப் பார்த்தால், அதன் முழு வடிவம் தெரியுமா ?

உங்களுடைய புத்தகத்தை மூக்கை உரசும்படி பக்கத்தில் வைத்துப் பார்த்தால் அதன் முழு வடிவம் தெரியாது. ஒரு குறிப்பிட்ட தூரம் தள்ளி வைத்துப் பார்த்தால்தான் முழுதாகத் தெரியும்.

பூமியானது மிகப் பெரிய கோளம். நிலநடுக்கோட்டுப் பகுதியில் விரிந்தும், வடதென் துருவங்களில் குவிந்து சற்று தட்டையாகவும் உள்ள ஓர் வடிவம் தான் பூமி. நமது பூமியின் வடிவம் தனித்தன்மை வாய்ந்தது. ஆங்கிலத்தில் அதை ஜியாய்ட் (Geoid) என்கிறார்கள்.

## வரைபடங்கள்

ஆங்கிலத்தில் மேப் (Map) என்பதைத் தமிழில் நாம் வரைபடம் என்கிறோம். கண்முன் தெரியும் பூமிப் பரப்பை ஒரு குறிப்பிட்ட அளவு முறையில் தாளில் அல்லது துணியில் வரைவதே வரைபடம் ஆகும்.

குறிப்பிட்ட அளவு முறையில் வரைவது என்றால் என்ன ? நம்முடைய ஊரின் வரை படத்தை அப்படியே ஒரு தாளில் வரைய முடியுமா ? அவ்வளவு பெரிய தாளில் வரைந்தாலும் அதை எங்கே விரித்து வைத்து எப்படிப் பார்க்கமுடியும் ? ஆகவே, பூமியில் ஒரு கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு சாலை இருந்தால், தாளில் அதை ஒரு சென்டி மீட்டர் நீளமுள்ள கோடாக வரைகிறோம். அப்படியே ஊரின் வரைபடம் முழுவதையும் வரைந்து, இந்த வரைபடம் ஒரு செ. மீ = 1 கி. மீட்டர் என்கிற அளவு முறையில் வரையப்பட்டதாகக் கூறுகிறோம்.

முற்காலத்தில் மனிதர்கள் ஒரே இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோது வரைபடங்கள் தேவைப்படவில்லை. உணவு கிடைக்காத காரணத்தாலும் பருவநிலை மாற்றத்தாலும் மக்கள் இடம்விட்டு இடம் சென்று வாழ நேரிட்டது. பின்னர், வாணிபம் செய்வதற்காக, வணிகர்கள் நாடுவிட்டு நாடு பயணங்கள் மேற்கொண்டனர். இந்தப் பயணங்களில் வழி தவறிப்போகாமல் இருக்கவும், சரியான வழியில் பயணம் செய்யவும் வரைபடங்கள் தேவைப்பட்டன.

**இடப்பெயர்வு**தான் வரைபடங்களின் தேவையை உண்டாக்கியது. வரைபடங்கள் உருவாக்க அல்லது வரைபடங்களைப் புரிந்துகொள்ள நமக்குப் பயிற்சி தேவை. நாம் பக்கத்தில் உள்ள நகரத்திற்குத் திரைப்படம் பார்க்கச் செல்கிறோம். ஆனால், நமக்குத் திரையரங்கம் இருக்கும் இடம் தெரியாது.

நமது நண்பர் “அது தெரியாதா. . . . அது பேருந்து நிலையத்துக்குப் பின்னால் உள்ள தெருவில் தொலைபேசி நிலையத்துக்கு எதிரே உள்ளது” என்பார். அது புரியவில்லை என்றால், ஒரு தாளில் படமாக வரைந்துகாட்டுவார்.

அது அளவைகள் இல்லாத படம். **மாதிரி வரைபடம்** (Sketch) என்று அதற்குப் பெயர்.


**செயல்பாடு:**
வீட்டிலிருந்து உன் பள்ளிக்குச் செல்ல ஒரு மாதிரி வரைபடம் வரைக.

புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் கட்டடப் பொறியாளர் ஒரு படம் வரைவார். அதைப் பார்த்திருக்கிறீர்களா ? (செய்முறை வகுப்பில் அப்படி ஒரு படத்தைக் கொண்டு வந்து எல்லாரும் பார்க்கலாம்) அதற்குத் **திட்ட வரைபடம்** என்று பெயர். ‘பிளான்’ என்று பேச்சுவழக்கில் கூறுவார்கள்.

இவற்றைவிட மேம்பட்ட வடிவமாக உலக வரைபடம் மற்றும் நாடுகளின் வரைபடங்கள் உள்ளன. வரைபடம் வெறும்கோடுகளாகத் தானே இருக்கும் ?


அதில் **திசை**யைப் புரிந்து கொள்ளவும் பூமியின்மேல் உள்ள பொருள்களைப் புரிந்துகொள்ளவும் அளவைகளும் குறியீடுகளும் உதவுகின்றன. ஒவ்வொரு வரைபடத்தின் வலப்புற மேல் பகுதியில் கீழே உள்ளது போன்ற குறியீடு இருக்கும்.

இதுதான் வரைபடத்தின் திசைகளைக் காட்டும் **குறியீடு**.




நாம் இருக்கும் இடத்தில் எது வடக்கு எது தெற்கு என்பது நமக்குத் தெரியும். வரைபடத்தின் வடக்கும் நாம் இருக்கும் இடத்தின் வடக்கும் ஒரே கோட்டில் இருக்கும்படி வரைபடத்தை விரித்துக் கொண்டால் திசைகளை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

**மாதிரி வரைபடம்** (Sketch map)



### அளவை

வரைபடத்தின் கீழ்ப்பகுதியில் "அளவை" கொடுக்கப்பட்டிருக்கும். வரைபடத்தில் இரண்டு புள்ளிகளுக்கும் இடையே உள்ள தூரத்திற்கும், தரையில் அதாவது பூமியின்மீது, அதே இரண்டு புள்ளிகளுக்கும் இடையே உள்ள தூரத்திற்கும் உள்ள விகிதமே **அளவை** எனப்படும்.

### குறியீடுகள்

பூமிப்பரப்பின்மீதுள்ள மலைகள், காடுகள், ஆறுகள், சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், இருப்புப் பாதைகள் மற்றும் பிறவும் வரைபடத்தில் அவற்றைப் போலவே வரையமுடியாது அல்லவா? ஆகவே, சில குறியீடுகள்மூலம் அவை வரையப் படுகின்றன.

இக்குறியீடுகள் படத்திற்குள்ளே இருக்கும். அவற்றுக்கான விளக்கம் படத்தின் வலப்பக்க ஓரத்தில் அல்லது இடப்பக்க ஓரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்.

உலகம் முழுவதும் எல்லாரும் ஒரே வடிவிலான குறியீடுகளைப் பயன்படுத்தினால் புரிந்து கொள்வது எளிது. ஆகவே, ஒரே மாதிரி முறைக் குறியீடுகளை உருவாக்கியுள்ளனர்.

#### முக்கிய முறைக் குறியீடுகள் (conventional symbols)




### வரைபடங்களின் வகைகள்

பூமியிலுள்ள பொருள்கள், தகவல்களையெல்லாம் ஒரே வரைபடத்தில் கொண்டு வந்துவிட முடியாது. ஆகவே, வரைபடங்களைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள்.

1. மலைகள், பீடபூமிகள், ஆறுகள், கடல்கள் போன்ற இயற்கைக் கூறுகளை வரைந்துகாட்டுவது **இயற்கை அமைப்பு வரைபடங்கள் (Physical maps)** எனப்படும். (எ.கா) இந்தியா இயற்கை அமைப்பு வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளது.

2. நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் இவற்றின் எல்லைகளைக்காட்டி வரையப் படும் படங்கள் **அரசியல் வரைபடங்கள் (Political Maps)** எனப்படும். (எ.கா) இந்திய அரசியல் வரைபடம், தமிழ்நாடு அரசியல் வரைபடமும் கொடுக்கப்பட்டுள்ளன.


3. வெப்பநிலையைக் குறிக்கும் வரைபடம், காடுகளைப்பற்றி மட்டும் காட்டும் வரைபடம், கனிம வளங்கள், போக்குவரத்து மற்றும் தொழில்கள் என ஒரு கருத்தினை மையமாகக் கொண்டு வரையப்படும் படங்கள் **கருத்துசார் வரைபடங்கள் (Thematic Maps)** எனப்படும். (எ.கா) இந்தியா போக்குவரத்து, தமிழ்நாடு தொழில்கள் வரைபடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### வரைபடங்களின் பயன்கள்


1. ஓர் இடத்தின் அமைவிடத்தை அறிய உதவும்.
2. பூமியில் உள்ள அனைத்து வளங்களின் அமைவிடங்களை அறிய உதவும்.
3. இராணுவத்தில் படைகள் இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்ல உதவும்.
4. பல்வேறு திட்டமிடலுக்கு உதவும்.
5. விண்ணில் கோள்களின் இயக்கம், விண்கலங்களின் நகர்வு போன்றவற்றை அறிய உதவும்.
6. வகுப்பறையில் கற்றல், கற்பித்தலுக்குத் துணை செய்யும்.


இந்தியா – அரசியல்
வ
மே
கி
தெ
ஆப்கானிஸ்தான்
பாகிஸ்தான்
சீனா
திபெத்
நேபாளம்
பூடான்
வங்காளதேசம்
மியான்மர்
இலங்கை
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
லட்சத் தீவுகள்
அந்தமான் நிக்கோபார் தீவுகள்
ஜம்மு–காஷ்மீர்
ஸ்ரீநகர்
இமாசலப்பிரதேசம்
சிம்லா
சண்டிகர்
பஞ்சாப்
டேராடூன்
உத்தரகண்ட்
ஹரியானா
புதுதில்லி
தில்லி
உத்திரப்பிரதேசம்
லக்னோ
ஜெய்ப்பூர்
இராஜஸ்தான்
சிக்கிம்
கேங்டாக்
அருணாசலப்பிரதேசம்
இட்டாநகர்
அஸ்ஸாம்
திஸ்பூர்
நாகாலாந்து
கொஹிமா
ஷில்லாங்
மேகாலயா
இம்பால்
மணிப்பூர்
அகர்தலா
திரிபுரா
அய்ஜால்
மிசோரம்
பீகார்
பாட்னா
ஜார்க்கண்ட்
ராஞ்சி
மேற்கு வங்காளம்
கொல்கத்தா
காந்திநகர்
குஜராத்
போபால்
மத்தியப்பிரதேசம்
சட்டீஸ்கர்
ராய்ப்பூர்
ஒடிசா
புவனேஸ்வர்
டையு
டாமன்
தாத்ரா நகர் ஹவேலி
சில்வாசா
மும்பை
மகாராஷ்டிரம்
ஹைதராபாத்
ஆந்திரப்பிரதேசம்
பனாஜி
கோவா
கர்நாடகம்
பெங்களூரு
சென்னை
புதுச்சேரி
கேரளா
தமிழ்நாடு
திருவனந்தபுரம்

# இந்தியா
# இயற்கை அமைப்பு



# இந்தியா
## போக்குவரத்து வழிகள்




தமிழ்நாடு
மாவட்டங்கள்
ஆந்திரா
கர்நாடகா
கேரளா
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
வ
மே
கி
தெ


தமிழ்நாடு
தொழில்கள்
ஆந்திரா
கர்நாடகா
கேரளா
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
வ
மே
கி
தெ



பூமியின் முழு வடிவத்தையும் நாம் பூமியிலிருந்து பார்க்க இயலாது. பெருங்கடல்கள், கண்டங்கள், தீவுகள் போன்ற நில அமைப்புகள், அவை அமைந்துள்ள அட்சங்கள், தீர்க்கங்கள் இவற்றை நாம் தெளிவாக அறிந்து கொள்ள ஏதுவாக வடிவமைக்கப்பட்ட மாதிரியே உலக உருண்டை. இது பூமியின் உண்மையான சிறு வடிவ மாதிரி. பூமி தனது அச்சில் 23 ½° சாய்ந்து சுழல்வது போலப் பூமி மாதிரியும், தனது அச்சில் சாய்ந்து உள்ளவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### பூமியின்மீது கோடுகள்

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு நாம் போகவேண்டுமானால், அது இங்கிருந்து எத்தனை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்று கேட்கிறோம் அதற்காக நாம் சாலைகளில் தூரத்தைக் குறிக்கும் கற்களை நட்டு வைத்திருக்கிறோம். எடுத்துக்காட்டாக, அதில் கிழக்கே போகும் சாலை 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்று கூறுகிறோம்.


பூமியின்மீது ஒரு மலை எங்கு உள்ளது? ஒரு நாடு எங்கு உள்ளது? கடலில் பயணம் செய்துகொண்டிருக்கும் ஒரு கப்பல் இப்போது சரியாக எந்த இடத்தில் நிற்கிறது? இவற்றையெல்லாம் துல்லியமாகக் கணக்கிட்டு அறிவது எப்படி?

வரைபடத்தில் பூமிப்பரப்பின்மீது கற்பனையாகச் சில கோடுகளை வரைந்து அக்கோடுகளில் எந்த இரு கோடுகளுக்கு இடையே நாம் தேடும் இடம் இருக்கிறது என்று அறிகிறோம்.

உலக உருண்டையில் (வரைபடத்திலும்கூட) கிடைவசமாக அல்லது கிழக்கு மேற்காகச் செல்லும் கற்பனைக்கோட்டிற்கு அட்சக்கோடு (Latitude) என்று பெயர். செங்குத்தாக அல்லது தெற்கு வடக்காகச் செல்லும் கோட்டிற்குத் தீர்க்கக்கோடு (Longitude) என்று பெயர்.

பூமியின் மையத்தில் கிழக்கு மேற்காகச் செல்லும் கோடு நிலநடுக்கோடு(Equator) (பூமத்திய ரேகை) எனப்படும்.

பூமியின் மொத்தக் கோண அளவு 360° ஆகும். நிலநடுக்கோடு 0° அட்சக்கோடாக அமைகிறது. இது முக்கிய அட்சக் கோடு. உலகில் முதன்முதலாக வரைபடத்தில் அட்சக் கோடு தீர்க்கக் கோடுகளை வரைந்தார் டாலமி. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க வானவியல் அறிஞர். அவர் வரைந்த உலக வரைபடம் இங்கே தரப்பட்டுள்ளது.



சமூக அறிவியல்

0° அட்சக் கோட்டுக்கு வடக்கே உள்ள பூமிப் பரப்பை வட அரைக்கோளம் என்பர்.

தெற்கே உள்ள பூமிப்பரப்பைத் தென் அரைக் கோளம் என்பர்.

பூமி, புவி, உலகம், உலகு, ஞாலம் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுவது இந்தப் பூமிக்கோளம்.

இலண்டனில் உள்ள கிரீன்விச் என்கிற இடத்தில் ஒரு வானவியல் ஆராய்ச்சிக் கூடம் அமைந்துள்ளது.

அதன் வழியே செல்லும் தீர்க்கக்கோடு 0° தீர்க்கக் கோடு ஆகும். அதைக் கிரீன்விச் தீர்க்கக் கோடு என்றும் கூறுவர்.

ஒரு குறிப்பிட்ட அட்சக்கோட்டை அடையாளப்படுத்த நிலநடுக் கோட்டிலிருந்து எத்தனை பாகை (டிகிரி) வடக்கே அல்லது தெற்கே என்று கூறவேண்டும்.


எடுத்துக்காட்டாக 10° வ. என்றால், வட அரைக்கோளத்தில் உள்ள 10ஆவது கோடு என்று ஆகும். 10° தெ. என்றால் தெற்கே உள்ள 10ஆவது அட்சக்கோடு ஆகும்.

அதேபோலத் தீர்க்கக்கோட்டைக் குறிக்கும்போது கிரீன்விச் கோட்டை மையமாக வைத்து 10° மே. என்றும்10° கி. என்றும் குறிப்பிட வேண்டும். 'மே' என்பது கிரீன்விச் கோட்டுக்கு மேற்கே என்றும், 'கி' என்பது கிரீன்விச் கோட்டுக்குக் கிழக்கே என்றும் ஆகிறது.

---

**நமது இந்தியாவின் அமைவிட இருப்பை எப்படிக் குறிப்பது ?**

## இந்தியாவின் அமைவிட இருப்பு




இந்தியா 8° வ. அட்சக்கோடு முதல் 37° வ. அட்சக்கோடு வரையும் 68° கி. தீர்க்கக்கோடு முதல் 97° கி. தீர்க்கக்கோடு வரையும் பரவியுள்ளது என்று குறிக்கவேண்டும்.

**செய்துபார்**

இதே அடிப்படையில் வரைபடம், உலக உருண்டையைப் பார்த்து நாடுகள், தீவுகள் சிலவற்றின் அமைவிடத்தைக் குறிக்கவும்.

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உலக உருண்டையில் கிழக்கு மேற்காகச் செல்லும் கற்பனைக் கோடுகளின் பெயர்________

   அ. அட்சக்கோடு ஆ. பூமி அச்சு இ. தீர்க்கக்கோடு

2. $0^{\circ}$ தீர்க்கக்கோடு என்பது ________

   அ. கிரீன்விச்கோடு ஆ. அட்சக்கோடு இ. பூமி அச்சு

3. நாடுகள், கண்டங்கள், தலைநகரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வரைபடத்தை________ என அழைப்பர்.

   அ. இயற்கையமைப்பு வரைபடம் ஆ. அரசியல் வரைபடம்

   இ. கருத்துசார் வரைபடம்

**II. விடை தருக**

1. வரைபடம் (map) என்றால் என்ன ?
2. கருத்துசார் வரைபடம் பற்றி வரையறு.
3. இந்தியாவின் இருப்பிட முகவரியைக் கூறு.
4. வரைபடங்களின் வகைகள் யாவை ?
5. வரைபடங்களின் பயன்கள் யாவை ?
6. அட்சக்கோடு என்றால் என்ன ?
7. தீர்க்கக்கோடு என்றால் என்ன ?

**III. வரைபடப் பயிற்சி**

1. இயற்கை அமைப்பு, அரசியல் மற்றும் கருத்துசார் வரைபடங்களைப் பார்க்க.

   அ. அவை எந்த அளவு விகிதத்தில் வரையப்பட்டுள்ளன ?

   ஆ. அவற்றில் என்ன தகவல்கள் தரப்பட்டுள்ளன ?

   இ. தரப்பட்டுள்ள முறைக் குறியீடுகள் பற்றிய விளக்கங்களைப் பட்டியலிடுக.

2. இந்திய வரைபடத்தில் மாநிலங்களையும் அவற்றின் தலைநகரங்களையும் குறிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு.

1. குறியீடுகளைப் பயன்படுத்தி உன் தெருவின் / பகுதியின் வரைபடத்தை வரையவும்.
2. டாலமி வரைந்த உலக வரைபடத்தை உற்றுநோக்கி விவாதிக்கவும்.
3. கற்பனைச் சுற்றுலா.

இந்தியா / உலகத்தில் நீ எந்தெந்த இடங்களுக்குச் சுற்றுலா செல்ல விரும்புகிறாய் ? எந்தப் போக்குவரத்தைப் பயன்படுத்துவாய் ?

ஆசிரியர் : நீ எங்கே போகப் போகிறாய் ?

மாணவர் : அன்டார்டிகா

ஆசிரியர் : எந்தப் போக்குவரத்தைப் பயன்படுத்துவாய் ?

மாணவர் : கப்பல்.

மாணவர் கப்பலில் செல்வதைப் போல நடித்துக்கொண்டே சென்று சுவரில் தொங்கும் உலக நில வரைபடத்தில் அன்டார்டிகாவைக் காட்ட வேண்டும். இதேபோன்று கண்டங்கள், நாடுகள், தீவுகள், நகரங்கள் போன்றவற்றை விளையாட்டு முறையில் அறிய வகைசெய்தல்.

# இந்தியா – அரசியல்

பயிற்சி




இந்தியாவின் மாநிலங்களையும் அதன் தலைநகரங்களையும் குறிக்கவும்

# 1. பேரரசுகளின் தோற்றம்

## மகாஜனபதங்கள்

வேத காலத்தின் இறுதியில், புதிய வளமான விளைச்சல் நிலங்களுக்காகவும், கனிம வளங்களுக்காகவும் சிறு சிறு ஆரிய அரசுகளான ஜனபதங்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டன. அதே நோக்கத்திற்காகக் கிழக்கு நோக்கி முன்னேறவும் முற்பட்டனர். இதனால், கங்கைச் சமவெளியின் கிழக்கிலும், தெற்கிலும் இருந்துவந்த ஆரியரல்லாத இனப்பிரிவுகளுடன் மோதல்கள் ஏற்பட்டன. இப்போராட்டங்களினால் சிறிய ஜனபதங்கள் போர்களில் தோற்கடிக்கப் பட்டதாலோ, தாமாகவே முன்வந்ததாலோ பெரும் மகாஜனபதங்களாக இணைந்தன.

பல ஜனபதங்களை உள்ளடக்கிய பெரிய அமைப்பாக 'மகாஜனபதங்கள்' உருவாக்கப்பட்டன. இனக்குழு அமைப்பை விட மேம்பட்டு பரந்து விரிந்த அரசுகளாக மகாஜனபதங்கள் இருந்தன. புத்தர் வாழ்ந்த காலத்தில் வட இந்தியாவில் பதினாறு மகாஜனபதங்கள் மேலோங்கி இருந்தன என்பதற்கான குறிப்புகள் உள்ளன. இவற்றில் சில, பரம்பரை அரசர்களால் ஆளப்பட்டன. வேறுசில தேர்ந்தெடுக்கப் பட்ட அரசர் குழுக்களால் ஆளப்பட்டன. வைசாலி நகரைத் தலைநகராகக் கொண்ட வஜ்ஜிக் கூட்டாட்சியில் 18 குழுக்கள் இணைந்திருந்தன.

கோசலம், அவந்தி, வத்சம், மகதம் போன்றவை பரம்பரை மன்னராட்சி மகாஜனபதங்களில் வலிமையானவை. இவை தங்களுக்குள்ளும், பிற குடியரசுகளுடனும் போரிட்டுக் கொண்டிருந்தன. மகதம் பிற மகாஜன பதங்களை வென்று இறுதியில் பேரரசாக எழுச்சி பெற்றது.

| மகா ஜனபதங்கள் | | |
|---|---|---|
| 1. அங்கம் | 7. கேதி | 13. அஸ்மகம் |
| 2. மகதம் | 8. வத்சம் | 14. அவந்தி |
| 3. கோசலம் | 9. குரு | 15. காந்தாரம் |
| 4. காசி | 10. பாஞ்சாலம் | 16. காம்போஜம் |
| 5. வஜ்ஜி | 11. மத்ஸ்யம் | |
| 6. மல்லம் | 12. சூரசேனம் | |

## மகதத்தின் எழுச்சி

### பிம்பிசாரர் – அஜாத சத்ரு

இன்றுள்ள பீகார் மாநிலத்தின் பாட்னாவைச் சுற்றியுள்ள பகுதி மகதம் என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகராக முதலில், 'சிராவஸ்தி' நகரமும், பின்னர், 'இராஜகிருகம்' என்னும் நகரமும், இறுதியாகப் 'பாடலிபுத்திரம்' என்னும் நகரமும் இருந்தன.

அரியங்க வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரர். மிகச்சிறிய அரசாக இருந்த மகதத்தைப் படையெடுப்புகள் மூலமும், திருமண உறவுகள் மூலமும் விரிவுபடுத்தி வலிமையான ஓர் அரசாக மாற்றினார். பிம்பிசாரரின் மகன் அஜாதசத்ரு தனது தந்தையையே சிறையில் அடைத்து ஆட்சியைக் கைப்பற்றினார். இவர் கோசலம், அவந்தி, வைசாலி ஆகிய மகாஜனபதங்களுடன் நீண்டகாலம் போர் செய்து வெற்றிபெற்று மகதத்துடன் இணைத்தார். பாடலிபுத்திரத்தில் பெரிய கோட்டையை அமைத்தவரும் அஜாதசத்ருவே ஆவார்.

### சிசுநாகன் – மகாபத்மநந்தன்

அரியங்க வம்சத்தை வீழ்த்தி, சிசுநாகர் ஆட்சியைப் பிடித்தார். சிசுநாகர்களுக்குப் பின் நந்தவம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர்.

இவர்கள் மகதத்தின் ஆட்சியை வட இந்தியா முழுவதும் பரப்பினர். மகாபத்மநந்தன் என்ற முதல் நந்தமன்னர் விந்திய மலைகளைக் கடந்து தக்காணப் பகுதிகளையும் கைப்பற்றினார். இவர் சிந்துநதி முதல் தக்காணம் வரையில் பரந்துவிரிந்த முதல் இந்தியப் பேரரசாக மகதத்தை உருவாக்கினார். சமூகத்தின் கடைசி நிலையில் வைக்கப்பட்டிருந்த சூத்திரர்களான சிசுநாகரும், மகாபத்மநந்தனும் மன்னர்களாக அடுத்தடுத்து முடிசூடினர். அக்காலத்தில், இஃது ஒரு பெரும்புரட்சி எனலாம். நந்தவம்சத்துப் பேரரசர்கள் சமண சமயத்தைப் போற்றுபவர்களாக இருந்தனர். கிரேக்க நாட்டைச் சேர்ந்த மாசிடோனிய மன்னன் அலெக்ஸாண்டர், இந்தியாவின் மேற்குப்பகுதி வழியாகப் படையெடுத்து வந்தார். நெடும் பயணத்தின் காரணமாக, வீரர்கள் களைப்புற்றதாலும் நந்தர்களின் போர்த் திறத்தை அறிந்ததாலும் திரும்பிச் சென்றார்.

## மௌரியப் பேரரசு

### சந்திரகுப்த மௌரியர் (கி.மு.320–298)

நந்தமன்னரான தனநந்தனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, போரில் வென்று மகதப்பேரரசை மௌரியவம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தர் கைப்பற்றி ஆண்டார்.



மெகஸ்தனிஸ்



சந்திரகுப்த மௌரியர்

அலெக்ஸாண்டர் தலைமையில் கிரேக்கர்களால் முன்னர்க் கைப்பற்றப் பட்டிருந்த மேற்கிந்தியப் பகுதிகளை வென்று மௌரியப் பேரரசுடன் இணைத்தார். இதனை எதிர்த்துப் படை யெடுத்து வந்த செலூகஸ் நிகேடார் என்ற கிரேக்க மன்னனையும் தோற்கடித்து, ஆப்கானிஸ்தானம், காந்தாரம் போன்ற பகுதிகளையும் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

செலூகஸ் நிகேடாரின் தூதுவரான மெகஸ்தனிஸ் என்ற கிரேக்க அறிஞர் பாடலிபுத்திரத்தில் பல ஆண்டுகள் தங்கி, இந்தியாவைப்பற்றி, 'இண்டிகா' என்னும் நூலை எழுதினார். சந்திரகுப்த மௌரியர் சமண சமயத்தைத் தழுவித் துறவியாகி, அரியணையைத் துறந்து சமண முனிவர் பத்திரபாகு என்பவருடன் தென் இந்தியாவிற்குச் சென்று விட்டார் என்று சமணசமய நூல்கள் கூறுகின்றன. அங்குச் சிரவணபெலகொலா பகுதியில் சமண சமய நம்பிக்கையின்படி தவமிருந்து உயிர்நீத்தார் எனவும் கூறப்படுகிறது.

### அசோகர்

சந்திரகுப்த மௌரியருக்குப்பின், அவர் மகன் பிந்துசாரர் 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருக்குப்பின், அவரது மகன்களில் ஒருவரான அசோகர் மௌரியப் பேரரசரானார் (கி.மு. 273–236). முதல் நான்கு ஆண்டுகள், அரசராவதை எதிர்த்த தனது சகோதரர்களின் கிளர்ச்சிகளை அடக்குவதில் செலவிட்டார். அதன்பிறகு எட்டு ஆண்டுகள் கழித்து மௌரியப் பேரரசிலிருந்து பிரிந்து சென்ற கலிங்கத்தின்மீது படையெடுத்தார். கடும்போருக்குப்பின் கலிங்கத்தை மீண்டும் மௌரியப் பேரரசுடன் இணைத்தார். ஆனாலும், இப்போரில் அவர் கண்ட பேரழிவுக் காட்சிகள் அவரை மிகவும் கலங்கச் செய்தன. இனிப் போரிடுவதில்லை என்றும் உறுதி பூண்டார்.

## அசோகரின் தர்மவிஜயம்

குடிமக்களுக்கு உதவுவதும், அவர்களை நன்னெறிப்படுத்துவதும்தான் அரசனின் கடமைகளாக இருக்க வேண்டும் என்று அசோகர் கூறினார். தமது எஞ்சிய வாழ்நாளை மக்களைச் சந்திப்பதிலும், அவர்களுக்கு உதவுவதிலும், அறவுரைகளைக் கூறுவதிலும் கழித்தார்.

படையெடுத்துப் போர் செய்து, வெற்றிபெறும் 'திக் விஜயத்தை' வெறுத்தார். மக்களிடம் தர்மத்தை வளர்க்க இவர் மேற்கொண்ட இடைவிடாத பயணங்கள், 'தர்மவிஜயம்' என்று குறிப்பிடப்படுகின்றன. சாதிமத பேதமின்றி அனைவருக்காகவும் சத்திரங்களையும், மருத்துவமனைகளையும் கட்டினார். கால்நடைகளுக்கும் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உயிர்ப்பலியிடும் யாகச் சடங்குகள் தடை செய்யப்பட்டன. தண்டனை விதிகளில் மனிதாபிமானத்துடன் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன; உயிர்வதைகள் தடுக்கப்பட்டன. கல்வெட்டுகளில் வட்டார மொழிகளிலே எழுதி, அசோகர் தமது 'தர்மத்தை' மக்களிடையே பரவச் செய்தார். மக்களுக்கு உதவுவதற்காகவே, தர்ம மகாமாத்திரர்கள் எனப்பட்ட சிறப்புப் பணியாளர்களை நியமித்தார். இந்தியாவில் முதன் முதலில் மக்கள் நலஅரசை (Welfare state) உருவாக்கிய சிறப்பு அசோகரையே சேரும்.



அசோகர்



சாரநாத் கற்றூண்

## அசோகரும் பௌத்தமும்

அறிவு, அன்பு, ஒழுக்கம் ஆகியவற்றை வலியுறுத்திய பௌத்த சமயத்தை அசோகர் தழுவினார். ஆனாலும் பிராமணர், அஜீவகர் போன்ற பிற மதப்பிரிவினரிடமும் கருணையுடன் நடந்துகொண்டார். பௌத்த சமயத்தைப் பரப்புவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார். கபிலவஸ்து, சாரநாத், புத்தகயா போன்ற பௌத்த நினைவிடங்களைச் செப்பனிட்டு விரிவுபடுத்தினார்.

நூற்றுக்கணக்கான தூபிகளையும், தூண்களையும் அமைத்தார். இவர் பாடலிபுத்திரத்தில் மூன்றாவது பௌத்த மாநாட்டைக் கூட்டினார். பௌத்தநெறியைப் பரப்புவதற்காகத் துறவியர் குழுக்களைப் பேரரசின் பலபகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பினார். இலங்கையில் பௌத்த சமயத்தைப் பரப்ப தன்மகன் மகேந்திரனை அனுப்பினார். அசோகரது முயற்சியால் பௌத்தசமயம் ஓர் உலக சமயமாக மலர்ந்தது.

## அசோகரின் கலைப் பணி

சிந்துவெளி நாகரிகத்திற்குப் பிறகு இந்தியாவில் கிடைத்துள்ள மிகப்பழமையான நினைவுச்சின்னங்களும், கல்வெட்டுகளும், தூபிகளும், கற்றூண்களும் அசோகர் காலத்திற்கு உரியவையே. சாஞ்சி, சாரநாத், லும்பினி போன்ற இடங்களில் காணப்படும் கலையழகு மிகுந்த மிகப்பெரிய பௌத்த தூபிகள் காண்போரை வியக்க வைப்பவையாகும்.

அசோகரால் நிறுவப்பட்ட கற்றூண்கள் ஒப்பற்ற கலையழகு மிக்கவை. அத்தூண்களின் வடிவமைப்பும், அதன் முகப்பிற்குக்கீழ்க் காணப்படும், தாமரை மலரைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்தது போன்ற சிற்ப வேலைப்பாடும், பாரசீகச் சிற்பக்கலையின் தாக்கத்தால் வந்தவை என்று சிலர் கருதுகின்றனர்.

## அசோகரது கல்வெட்டுகள்

குகைகளின் சுவர்களிலும், கற்றூண்களிலும், கற்பாறைகளின் மீதும் அசோகரது ஆணைகள் மற்றும் அறிவுரைகள் பொறிக்கப்பட்டுப் பேரரசின் பல பகுதிகளிலும் வைக்கப்பட்டன. பெரும்பாலான கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டவை. வடமேற்கு எல்லைப் பகுதியில் கரோஸ்தி என்னும் எழுத்திலும், ஆப்கானிஸ்தான் பகுதிகளில் கிரேக்க எழுத்திலும் பொறிக்கப் பட்டுள்ளன. அசோகரது போர் மறுப்பு, அறக்கொள்கை, மனிதநேயக் கருத்துகள் இக்கல்வெட்டுகளில் வெளிப்படுகின்றன.

### அசோகரின் கல்வெட்டு

"எட்டு ஆண்டுகள் போரிட்டேன். கலிங்கத்தை வென்றேன். அதில் ஒரு இலட்சம்பேர் மாண்டனர்; ஒன்றரை லட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறினர்.

அது எனக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. ஜனபதம் போரில் தோற்கடிக்கப் படும்போது, இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்படுகிறார்கள்; சிறை பிடிக்கப் படுகிறார்கள். முன்பு அன்புக் குரியவர்களாக இருந்தவர்களைப் போர் பிரிக்கிறது.

போரின் விளைவுகள் அனைத்து மக்களையும் பாதிக்கின்றன. இது என்னை மிகவும் துன்புறுத்தியது. போரைவிடத் தர்மத்தைப் பின்பற்றுவதே சிறந்தது என்பதை ஏற்றுக் கொண்டேன்". – அசோகர்



## மௌரியரின் ஆட்சி முறை

அசோகரது பேரரசு, ஆட்சி வசதிக்காக ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. வடக்குப் பகுதிக்குத் தட்சசீலமும், மேற்குப் பகுதிக்கு உஜ்ஜயினியும், தெற்குப் பகுதிக்குச் சுவர்ணகிரியும், கிழக்குப் பகுதிக்குத் தோசாலியும் தலை நகரங்களாக இருந்தன. பேரரசின் மையமான மகதத்தைப் பேரரசரே பாடலிபுத்திரத்திலிருந்து ஆட்சி செய்தார்.

பேரரசருக்கு ஆலோசகர்களாக அமைச்சர்களும், படைத்தலைவர்களும் இருந்தனர். சாதி, மதத் தடையின்றி அமைச்சர்களும் அதிகாரிகளும் நியமிக்கப் பட்டனர். மகாமாத்திரர் என்ற உயர் அதிகாரிகள் மாநிலங்களின் அதிகாரிகளாகவும் ஆளுநர்களாகவும் இருந்தனர். இளவரசர்களும் மகாமாத்திரர்களாக நியமிக்கப்பட்டனர்; யுக்தர், பிரதேசிகர், தூதர், ஒற்றர் போன்ற பிற அதிகாரிகளும் இருந்தனர். எல்லைப்பகுதிப் பாதுகாப்பைக் கண் காணித்தோர் 'அந்த மகாமாத்திரர்' எனப் பட்டனர்.

மக்களது அறவாழ்க்கைக்கு உதவ தரும மகாமாத்திரர்கள் இருந்தனர். நகரங்களில் உள்ளாட்சி அமைப்புகள் இருந்தன. பாடலிபுத்திரத்தை **30**பேர் கொண்ட நகரமன்றம் ஆட்சி செய்ததாக மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்ற நூல் கூறுகிறது. இவர்கள் **5** பேர் கொண்ட ஆறுகுழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவினரும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பினை ஏற்று ஆட்சி செய்தனர்.

மௌரியரது வலிமையான படை **30** பேர் கொண்ட நிருவாகக் குழுவால் கண்காணிக்கப்பட்டது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, கப்பற்படை போன்ற ஐந்து பிரிவுகளைக் குழுவின் **5** உட்குழுக்கள் நிருவாகம் செய்தன. ஆறாவது உட்குழு இப்படைகளுக்கான போக்குவரத்து, உணவு, மருத்துவ வசதி, தளவாடங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தது.



அசோகர் கால
மௌரியப் பேரரசு
தட்சசீலம்
இந்திரப்பிரஸ்தம்
பாடலிபுத்திரம்
சாரநாத்
கயா
சாஞ்சி
உஜ்ஜயினி
கிர்நார்
தாம்ரலிப்தி
தோசாலி
கலிங்கம்
சுவர்ணகிரி
சித்தபுரம்
சத்தியபுத்திரர்
காஞ்சி
சோழர்
பாண்டியர்
இலங்கை
அசோகர் கால மௌரியப் பேரரசு

மௌரியர்களின் நீதி நிருவாகம் முதலில் மிகக் கடுமையானதாக இருந்தது. அசோகர் இதில் மனித நேயத்துடன் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்; சித்திரவதை ஒழிக்கப்பட்டது. மரண தண்டனைக் கைதிகளுக்கு ஆறுதலளிக்கும் விதமாகப் புதிய நடைமுறைகளைக் கொண்டு வந்தார். சிறிய குற்றங்களுக்கான தண்டனைக் காலத்தைக் குறைத்தார்.

அரசரும், அதிகாரிகளும் தொடர்ந்து பயணம் செய்து மக்களது குறைகளை நீக்குவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மௌரிய வம்சத்தின் கடைசி அரசரான பிருகத்திரதன் தன் படைத் தலைவர் புஷ்யமித்ரசுங்கனால் படுகொலை செய்யப்பட்டார். இதற்குப்பின் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுக்காலம் மகதம் வலுவிழந்து நின்றது.

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. பாடலிபுத்திரம் என்னும் கோட்டையை அமைத்தவர்

   அ) அசோகர் ஆ) பிம்பிசாரர் இ) அஜாதசத்ரு

2. மெகஸ்தனிஸ் எழுதிய நூல்

   அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) முத்ராராட்சசம்

3. அசோகர் அரியணை ஏறிய ஆண்டு

   அ) கி.மு.232 ஆ) கி.மு.273 இ) கி.மு.255

4. மூன்றாவது பௌத்த மாநாடு நடைபெற்ற இடம்

   அ) பாடலிபுத்திரம் ஆ) காஷ்மீரம் இ) கபிலவஸ்து

### II சரியா / தவறா ?

1. செலுகஸ் நிகேடாரின் தூதுவர் மெகஸ்தனிஸ்.
2. நந்த வம்சத்தின் முதல் மன்னன் மகாபத்மநந்தன்.
3. அசோகர் தர்மவிஜயத்தை மறுத்து, திக்விஜயம் மேற்கொண்டார்.
4. இந்தியாவின் முதல் மக்கள் நலஅரசை உருவாக்கியர் அசோகர்.
5. இலங்கையில் பௌத்த சமயத்தைப் பரப்ப அசோகரால் அனுப்பப்பட்டவர் மகேந்திரர்.

### III. விடையளிக்க

1. மகாஜனபதங்கள் எவ்வாறு உருவாயின ?
2. இந்தியாவில் முதற்பேரரசை உருவாக்கிய பெருமைக்குரியவர் யார் ? விளக்குக.
3. இந்தியாவில் மக்கள் நலப்பேரரசை முதலில் உருவாக்கியவராக அசோகர் கருதப்படுவது ஏன் ?
4. அசோகர் மனமாற்றமடைந்ததன் காரணத்தை விவரி.
5. அசோகரது கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவங்களைப் பற்றி எழுதுக.

## உருவாக்க மதிப்பீடு.

1. அரசர்கள் காலத்தில் மக்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். தற்போது மக்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுக்கிறார்கள் என்பதைப் பட்டியலிடுக.
2. அருகில் கல்வெட்டு ஏதேனும் இருந்தால் சென்று பார்க்கவும், எழுத்துகளைப் படிக்க முயல்க.
3. சாரநாத் கல்தூண் படத்தை வரையவும் அல்லது படத்தைப் பார்த்து அறிந்துகொண்ட விவரங்களை எழுதவும்.
4. கொடுக்கப்பட்டுள்ள இந்தியா வரைபடத்தில் அசோகர்கால மௌரியப் பேரரசின் எல்லைகளை வரையவும். பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
    - தட்சசீலம்
    - இந்திரப் பிரஸ்தம்
    - பாடலிபுத்திரம்
    - சாரநாத்
    - கயா
    - கலிங்கம்
    - கிரிநகர்

# 2. குஷானப் பேரரசு

மௌரியர்களின் வீழ்ச்சிக்குப்பின் இந்தியாவில் நிறுவப்பட்ட வலிமையான பேரரசு குஷானப் பேரரசு ஆகும். யூச்சி என்ற இனக்குழுவின் ஓர் உட்பிரிவினரே குஷானர்கள். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் குஷான அரசை முதலாம் காட்பிஸஸ் கி.பி.முதல் நூற்றாண்டில் நிறுவினார். இவருக்குப்பின் வந்த இரண்டாம் காட்பிஸஸ் (கி.பி.65–75) பஞ்சாபையும், கங்கைச் சமவெளியையும் கைப்பற்றினார்.

### கனிஷ்கர்

இரண்டாம் காட்பிஸஸ் இறந்தபின் கனிஷ்கர் (கி.பி.78–101) குஷான அரியணையைக் கைப்பற்றினார். கனிஷ்கர் குஷான வம்சத்தின் தலைசிறந்த மன்னராக விளங்கினார். இவர் கிழக்கில் பாடலிபுத்திரம் வரை படையெடுத்தார். சாகசத்திரபர்களை அடிபணிய வைத்தார். சீனாவின்மீது இருமுறை படையெடுத்தார். முதல் போரில் புகழ்பெற்ற சீனத் தளபதி பாஞ்ஜோ என்பவனிடம் தோல்வியுற்றார். ஆயினும் இரண்டாவது போரில் வெற்றி பெற்றார். இதனால் காஷ்கர், யார்க்கண்ட், கோடான் ஆகிய மத்திய ஆசியப் பகுதிகளைத் தன் பேரரசுடன் இணைத்தார். புருஷபுரம் என்ற பெஷாவரைப் புதுநகராக உருவாக்கித் தன் தலைநகராக ஆக்கினார்.

பின்னர், பௌத்த சமயத்தில் ஈடுபாடு கொண்டார். நான்காவது பௌத்த மாநாட்டைக் காஷ்மீரில் கூட்டினார். இதில் புகழ்பெற்ற பௌத்த அறிஞர்களான வசுபந்து, அசுவகோஷர், நாகார்ஜுனர் போன்றோர் பங்கேற்றனர். இம்மாநாட்டில்தான் மகாயான பௌத்த சமயப்பிரிவு தோன்றியது.

மகாயான பௌத்த சமயத்தைப் பரப்புவதற்காகத் துறவியர் குழுக்கள் திபெத், சீனா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. மகாயான பௌத்த அறிஞரான அசுவகோஷரால் வடமொழியில் புத்தசரிதம், சூத்திராலங்காரம் போன்ற நூல்கள் இயற்றப்பட்டன. வசுமித்திரர் மகாவிபாசா என்ற சாத்திரநூலைத் தொகுத்தார். நாகார்ஜுனர் தத்துவ நூல்களை எழுதினார். மருத்துவ அறிஞர் சரகரும், கிரேக்கக் கட்டடக்கலை வல்லுநர் எஜிலாஸுசும் கனிஷ்கர் அரசவையில் இடம்பெற்றனர்.

இந்திய, கிரேக்க நுட்பங்கள் இணைந்த காந்தாரக் கலையினால் புத்தர், பௌத்தத்துடன் தொடர்புடையோரின் புதிய சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. பௌத்த சமயத்தின்மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டாலும், பௌத்த சமயத்தைப் பரப்ப அவர் மேற்கொண்ட முயற்சிகளாலும் இவர் 'இரண்டாம் அசோகர்' என்று அழைக்கப்பட்டார். கனிஷ்கர் பதவிக்கு வந்த ஆண்டினை முதன்மையாக வைத்துச் சக சகாப்தம் என்னும் புதிய காலக்கணக்கீட்டு முறை உருவாயிற்று. கனிஷ்கர் இறுதியில் அவரது கூடாரத்திலேயே சதிகாரர்களால் கொலை செய்யப்பட்டார். இவருக்குப்பின், குஷானப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.


கனிஷ்கர்

### குப்தப் பேரரசு

குஷானப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மகதத்தில் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு உருவான பேரரசு குப்தப் பேரரசு ஆகும்.

சமூக அறிவியல்

குப்தவம்சத்தின் முதல் சுதந்தர மன்னராக முதலாம் சந்திரகுப்தர் **(கி.பி.319–335)** குறிப்பிடப்படுகிறார். இவரது ஆட்சியின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் குப்தயுகம் என்ற காலக் கணக்கீடு புகுத்தப்பட்டது.

முதலாம் சந்திரகுப்தருக்குப்பின் பட்டத்திற்கு வந்த சமுத்திர குப்தரது (கி.பி. 335–375) படையெடுப்பு வெற்றிகளைப்பற்றி அலகாபாத் கல்வெட்டு விரிவாகக் குறிப்பிடுகிறது. வங்காளத்திலிருந்து சிந்துநதி வரையிலும் இமயமலையிலிருந்து விந்தியமலை வரையிலும் இப்பேரரசு விரிவாக்கப்பட்டது. ஒன்பது வடஇந்திய அரசர்களையும், பதினோரு குடியரசுக் குழுக்களையும், பன்னிரண்டு தென்னிந்திய அரசர்களையும் போர்களில் இவர் வென்றதாக அலகாபாத் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அலகாபாத் கல்வெட்டைப் பொறித்தவர் இவரது அமைச்சர் அரிசேனர் ஆவார். சமுத்திரகுப்தருக்குப் பின்வந்த இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 380 – 414) புகழ் பெற்ற அரசராகப் போற்றப்படுகிறார். இவர் படையெடுத்து வந்த வேற்று நாட்டவரான சாகர்களை வென்று, உஜ்ஜயினி நகரைக் கைப்பற்றிக் கொண்டார்.

இராமாயணம், மகாபாரதம் போன்றவையும் 18 புராணங்களும் தொகுக்கப்பட்டன; பஞ்சதந்திரக் கதைகள் இயற்றப்பட்டன. காளிதாசர், பாசர், விசாகதத்தர் போன்ற புகழ்பெற்ற வடமொழிப் புலவர்கள் பலர் குப்தர்களால் போற்றப்பட்டனர்.


அஜந்தா ஓவியம்


மெகரெளலி இரும்புத் தூண்

சமஸ்கிருதமொழி ஆட்சி மொழி ஆயிற்று. விஷ்ணு, சிவன், துர்க்கை போன்ற இந்துக் கடவுளருக்குச் சிறுசிறு கோயில்கள் கட்டப்பட்டன. அஜந்தாவிலுள்ள சில பௌத்த குகைச்சிற்பங்களும், ஓவியங்களும் குப்தர் காலத்தவை.

ஆர்யபட்டர், வராகமிகிரர் போன்ற புகழ் பெற்ற கணித, வானியல் அறிஞர்களும், சரகர், சுசுருதர், தன்வந்திரி முதலிய மருத்துவ அறிஞர்களும் குப்தர் காலத்தவர்களே. 1500 ஆண்டுகளாய்த் துருப்பிடிக்காமல் இன்றும் பொலிவுடன் இருக்கும் மெகரௌலி இரும்புத்தூண் குப்தர் காலத்ததாகும்.

குமாரகுப்தர் காலத்தில், பௌத்தர்களது புகழ்பெற்ற நாளந்தா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. ஆனால், சமூகஅமைப்பில் சாதிமுறை மிகக் கடுமையாயிற்று. அசோகர் காலத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டிருந்த உயிர்ப்பலி, வேள்விகளுக்குப் புத்துயிர் அளிக்கப் பட்டது. சிவன் – சக்தி – விஷ்ணு – குமரன் (முருகன்) வழிபாடுகள் பெருகின. இந்துக் கடவுள்களுக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டன.

குப்தர்களின் காலம் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. புஷ்யமித்திரர், ஹூணர் போன்ற அந்நியர் படை யெடுப்புகளால் குப்தப் பேரரசு வீழ்ச்சி யடைந்தது. புகழ்பெற்ற சீனப் பயணி பாகியான், இரண்டாம் சந்திரகுப்தர் (விக்கிரமாதித்யன்) காலத்தில் இந்தியாவின் பௌத்தத் தலங்களைக் காணவந்தார்.

## ஹர்ஷப் பேரரசு

குப்தர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு, அந்நியர் (ஹூணர்) படையெடுப்புகளால் சீர்குலைந்திருந்த வட இந்தியாவில் மீண்டும் ஒருபேரரசை உருவாக்கியவர். தானேஸ்வரத்தின் அரசர் ஹர்ஷவர்த்தனர் (கி.பி. 606 – கி.பி.647) ஆவார்.



ஹர்ஷர்

ஹர்ஷர், தமது அண்ணனைக் கொன்ற சசாங்கனுடன் நீண்டகாலம் போர்புரிந்தார். இதில் இவருக்குக் காமரூப (அஸ்ஸாம்) மன்னன் பாஸ்கரவர்மன் உதவிசெய்தார். சசாங்கன் இறந்தபிறகு, வங்க அரசின் பெரும்பகுதியைத் தன்னரசுடன் இணைத்துக் கொண்டார். அத்துடன், தனது தங்கை ராஜஸ்ரீயின் வேண்டுகோளுக்கு இணங்க, கன்னோசிக்கும் மன்னர் ஆனார். இதற்குப் பின்னர், கன்னோசியே ஹர்ஷரது தலைநகராக விளங்கியது.

மாளவம், சிந்து, ஒரிசா பகுதிகளையும் ஹர்ஷர் வென்றார். தென்னிந்தியாவைக் கைப்பற்றவும் இவர் முயன்றார். ஆனால், அதில் இவர் வெற்றி பெறவில்லை. ஏனென்றால், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி இவரைத் தோற்கடித்தார்.

பௌத்தத் துறவியாக மாறிய ராஜஸ்ரீ, சீன அறிஞர் யுவான்சுவாங் ஆகியவர்களால் ஹர்ஷர் பௌத்தத்தின்பால் ஈர்க்கப்பட்டார். கன்னோசியிலும், பிரயாகையிலும் இவர் மிகப்பெரிய அளவில் சமய மாநாடுகள் நடத்தினார். இவற்றில் பௌத்த அறிஞர்களுடன் பிறமத அறிஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர். தனது செல்வங்கள் அனைத்தையும், இம் மாநாடுகளின் இறுதியில், துறவிகளுக்கும், அறிஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் வாரி வழங்கினார் ஹர்ஷர்.

பௌத்தப் பல்கலைக்கழகமான நாளந்தா ஹர்ஷரது ஆதரவால் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. இந்தியாவின் பலபகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் நாளந்தா பல்கலைக்கழத்தில் கல்வி பெறுவதற்காக இந்தியாவிற்கு வந்தனர்.


ஹர்ஷர் இடைவிடாது பயணம்செய்து மக்களின் குறைகளையும் தேவைகளையும் கேட்டறிந்து நல்லாட்சி புரிந்தார். கலை, இலக்கியம் போன்றவற்றிற்கு ஆதரவளித்தார். இவரது அமைச்சரான பாணர் சமஸ்கிருதமொழி அறிஞராவார். இவர், 'ஹர்ஷசரிதம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். ஹர்ஷர் வடமொழியில் புலமைபெற்றவர். இவர் 'நாகானந்தம்' 'ரத்னாவளி' 'பிரியதர்சிகா' என்னும் நூல்களையும் படைத்துள்ளார்.



நாளந்தா பல்கலைக்கழகம்

சமூக அறிவியல்

ஹர்ஷப் பேரரசு




சீன நாட்டைச் சேர்ந்த பௌத்தத் துறவி யுவான் சுவாங், இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். கன்னோசி, பிரயாகை, நாளந்தா, காஞ்சிபுரம் உள்ளிட்ட பலஇடங்களுக்கும் சென்றார். ஹர்ஷரது அரசவையிலும் சிறிது காலம் இருந்தார்.

இவர் எழுதிய, 'சி–யு–கி' என்னும் பயண நூல் அன்றைய இந்தியாவைப் பற்றியும், பௌத்த சமயத்தைப் பற்றியும் பல செய்திகளைத் தருகின்றது. இசுலாமியர் படையெடுப்பிற்குமுன், வடஇந்தியாவில் இருந்த கடைசிப் பேரரசு ஹர்ஷரது பேரரசாகும்.

## மதிப்பீடு

### I கோடிட்ட இடங்களை நிரப்புக

1. குஷான அரசை நிறுவியவர் ____________
2. புத்தசரிதம் என்ற நூலை இயற்றியவர் ____________
3. கனிஷ்கர் காலத்து மருத்துவ அறிஞர் ____________
4. தானேஷ்வரத்தின் அரசர் ____________
5. குப்தர்களின் காலம் இந்தியாவின் ____________

### II சரியா? தவறா?

1. கனிஷ்கரின் தலைநகரம் பெஷாவார்.
2. சி–யு–கி என்ற நூலை எழுதியவர் யுவான்சுவாங்.
3. கிரேக்கக் கட்டடக் கலை வல்லுநர் எஜிலாஸ்.
4. மெகரௌலி இரும்புத் தூண் குப்தர் காலத்தைச் சேர்ந்தது.
5. சூத்திராலங்காரம் என்ற நூலை எழுதியவர் அசுவகோஷர்.

### III பொருத்துக


| | |
|---|---|
| 1. நான்காவது பௌத்த மாநாடு | – குஷான வமிசத்தை நிறுவியர் |
| 2. சமுத்திரகுப்தரின் காலம் | – குமார குப்தர் |
| 3. கனிஷ்கரின் காலம் | – கனிஷ்கர் |
| 4. பாணர் | – யூச்சி இனக்குழு |
| 5. ஹர்ஷர் | – கி.பி.335–கி.பி.375 |
| 6. குஷானர் | – கி.பி. 78 – கி.பி.101 |
| 7. இரண்டாம் அசோகர் | – ஹர்ஷ சரிதம் |
| 8. நாளந்தா பல்கலைக்கழகம் | – காஷ்மீர் |
| 9. முதலாம் காட்பிசஸ் | – பிரியதர்சிகா |

### IV. விடையளிக்க

1. காந்தாரக் கலையின் பின்னணியை விளக்குக.
2. குப்தரது காலம், “ இந்தியாவின் பொற்காலம்” என்பதற்கான காரணங்களைக் கூறுக.
3. குப்தர்கள் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த வேற்றுநாட்டுப் படையெடுப்பாளர்களைக் குறிப்பிடுக.
4. சக யுகம் – குப்த யுகம் விளக்கவும்.
5. பாகியான் – யுவான் சுவாங் பற்றிக் குறிப்பு வரைக.

## உருவாக்க மதிப்பீடு.

1. நிரப்புக



2. நூலகத்தில் நீ படித்த புத்தகங்களையும் அதன் ஆசிரியர்களையும் எழுதுக.

3. போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்தில் பாகியான், யுவான் சுவாங் போன்றோர் எவ்வாறு இந்தியாவிற்கு வந்திருக்கக்கூடும்? பயண அனுபவத்தைக் கேட்டறிக. படித்தறிக.

4. அரசர்களின் கவனம் எதில் அதிகமாக இருந்தது ?

அ) படையெடுப்பு

ஆ) மக்கள் நலப்பணி– விவாதிக்கவும்.